எமது தற்போதைய நிர்வாக சபை பொறுப்பேற்றதன் பின்னர் குறிப்பாக கடந்த ஒரு வருட காலப்பகுதியில் மேலும் சில உதவிகளை நாம் எமது கல்லூரிக்கு செய்துள்ளோம். குறிப்பாக கொக்குவில் இந்து சாரணர் அமைப்பின் எழுபத்தைந்தாவது ஆண்டு விழா செலவுகளுக்கென ஒருதொகை பணத்தை வழங்கியிருந்தோம். அத்தோடு கூடைப்பந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளருக்கான மாதாந்த கொடுப்பனவையும் தை மாதத்திலிருந்து தற்போது நாமே வழங்கி வருகின்றோம். மேலும் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட மேம்பாட்டுக்கென எமது நிர்வாகசபையை சேர்ந்த திருமதி. கவிதா பாலகுமார் அவர்களால் $1000 டொலர்கள் எமது சங்கத்தினுடாக பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. கல்லூரியின் விளையாட்டுத்துறைக்காக கொக்குவில் விளையாட்டுக்கழகத்தினால் $1000 டொலர்கள் அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளது. மற்றும் எமது சங்கத்தினால் சர்வதேச, தேசிய ரீதியல் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள், அணிகள், பயிற்றுவிப்பாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் Colors Night இல் அன்பளிப்பு (Cash) செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக மேலும் சில உதவிகளை மாணவர்களுக்கு செய்ய நாம் ஆவலாக உள்ள போதும் அச்செலவினங்களை நிர்வகிப்பதற்கென ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாக கட்டமைப்பை உருவாக்கிய பின்பே அவற்றை செய்ய முடியும் என்ற காரணத்தால் அவை பிற்போடப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்கென மேலும் ஒரு தொகைப்பணத்தை நிரந்தர வைப்பிலிடுவதற்கான திட்டம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணமும் தற்போது கையிருப்பில் உள்ள போதும் பணத்தை இலங்கையில் வைப்பிலிடுவதிலுள்ள நடைமுறைச்சிக்கல்கள் காரணமாக அதனை செய்வதில் சில காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளது.


இலங்கையில் வடமாகாணத்தின் கல்வி நிலையானது பெரும் பின்னடைவை சந்தித்துள்ள இன்றைய நிலையில் தெளிவான ஒரு மூலோபாயத்தின் அடிப்படையில் பொருத்தமான திட்டமிடல்களை செய்து உதவிகளை வழங்கவேண்டிய நிலையில் நாம் இன்றுள்ளோம். அதற்காக இனிவரும் காலங்களில் மற்றைய நாடுகளிலுள்ள எமது கல்லூரியின் சகோதர சங்கங்களுடன் இணைந்து செயற்பட எண்ணியுள்ளோம். எனவே இதுவரை காலமும் தங்கள் பேராதரவை வழங்கிவந்த கனடா வாழ் கொக்குவில் இந்துக் கல்லூரிச்சமூகம் தமது உதவிகளை தொடர்ந்தும் வழங்கி எமது கல்லூரியின் கல்வி, மற்றும் விளையாட்டுத்துறைகளை மேம்படுத்த பங்களிப்பு செய்ய வேண்டுமென வினயமாக வேண்டிக்கொள்கின்றேன்.

"Only a life lived for others is worth living." — Albert Einstein

சி. அச்சுதன்
பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

# நம்பிக்கை நிதியம்

1994ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்த பின் கனடா கொக்குவில் விளையாட்டுக் கழகத்தினர், தம்மிடம் இருந்த இந்திய இராணுவ ஆக்கிரமிப்பில் பாதிக்கப்பட்ட கொக்குவில் மக்களுக்காகத் திரட்டப்பட்ட நிதியிலிருந்த மிகுதிப் பணத்தை பழைய மாணவர் சங்கத்திடம் கையளித்தனர். அப்பணத்துடன் எமது சங்கமும் சிறு தொகையைச் சேர்த்து ஐயாயிரம் ($5000.00 CD) கனடிய டொலரை கொக்குவிலில் இயங்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் (தாய்ச்சங்கம்) கணக்கில் வைப்பில் இட்டு அதன்மூலம் வரும் வட்டியை பாடசாலையின் விளையாட்டுத்துறைக்குப் பயன்படுத்தி வருகிறது.

அன்றிலிருந்து 2010ஆம் ஆண்டு வரைக்கும் எமது சங்கம் பாடசாலையின் பலவித தேவைகளுக்கும் மொத்தமாக $110,693.00 கனடிய டொலரை அனுப்பி வைத்துள்ளது. மேலும் 2010ஆம் ஆண்டில் இருந்து 2018ஆம் ஆண்டு வரைக்கும் அண்ணளவாக $60,000.00 கனடிய டொலரை அனுப்பி வைத்துள்ளது. 2019ஆம் ஆண்டு விளையாட்டுத்துறைக்கென எமது சங்கத்தால் ஒதுக்கப்பட்ட கனடிய டொலர் $7000.00மும் கொக்குவில் விளையாட்டுக் கழகத்தினால் எம்மிடம் கையளிக்கப்பட்ட கனடிய டொலர் $1000.00மும் சேர்த்து $8000.00 சங்கத்திடம் உள்ளது. மிகவிரைவில் விளையாட்டுத்துறைக்கான ஒரு நம்பிக்கை நிதியத்தினை இலங்கையில் ஏற்படுத்தி அதில் இப்பணத்தினை வைப்பிலிட சங்கம் தீர்மானித்துள்ளது. அதேவேளை கல்லூரியின் பழையமாணவி திருமதி கவிதா பாலகுமார் அவர்களால் கல்லூரியின் வலைப்பந்தாட்ட அபிவிருத்திக்கென வைப்பிலிட தரப்பட்ட கனடிய டொலர் $1000.00 கொக்குவில் இந்துக் கல்லூரியின் நம்பிக்கை நிதியத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

எமது சங்கத்தால் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவருக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் தலா ரூபா 300.00 ஆண்டு 2009_2010 காலப்பகுதியில் நடைபெற்ற மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கான செலவில் கணிசமான பங்கினை ஈடுசெய்தது. ஆனால் இன்று பிரத்தியேக வகுப்பிற்கான செலவு பன்மடங்காக அதிகரித்து இருப்பதனால் சங்கம் வழங்கும் புலமைப் பரிசிலை ரூபா 600.00ஆக அதிகரிக்க எண்ணி உள்ளது. எனவே ஒரு மாணவருக்கு ரூபா 300.00 மேலதிகமாகத் தேவைப்படுகிறது. இச்சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்குமாக மாதாந்தம் ரூபா 18,000.00 மேலதிகமாகத் தேவைப்படுகிறது. இதன் அடிப்படையில் ஆண்டிற்கு ரூபா 216,000.00 தேவைப்படுகிறது. இத்தொகையை வருட வட்டியாக சங்கம் பெறுவதற்கு ரூபா 2,200,000.00 மேலதிகமாக வைப்பிலிட வேண்டும். அதற்கு 60 கொடையாளிகள் ஒரு மாணவருக்கு $300.00 கனடிய டொலர்ப்படி தந்து உதவுமாறு சங்கம் கேட்டுக்கொள்கிறது. இப்பணத்திலிருந்து வரும் வட்டி வருடா வருடம் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும். எனவே மாணவர்கள் மொத்தமாக ரூபா 600.00இனைப் பெற்றுக்கொள்வர்.

எமது கடமையினையும், உதவியினையும் எமது பாடசாலையுடன் மட்டும் நின்றுவிடாது இப் புலமைப்பரிசில் திட்டத்தினை விரிவுபடுத்தி எமது அயல் பாடசாலைகளுக்கும் குறிப்பாகப் பெற்றோரின் உதவியின்றி வடக்கு, கிழக்கில் படிக்கும் மாணவர்களுக்கும் உதவ வேண்டும் என்ற சங்கத்தின் நோக்கத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறது. உங்களின் ஆக்கபூர்வமான கருத்தினையும் ஆதரவினையும் எதிர்வரும் 2019 வைகாசித் திங்களில் (May) நடைபெற இருக்கும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இதுவரை எமது செயற் திட்டங்களுக்கு உதவிபுரிந்த அனைத்துள்ளங்களுக்கும் எமது நன்றியை தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் தங்களது ஆதரவை வேண்டி நிற்கிறோம்.

நம்பிக்கை நிதியம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

தொடர்புகளுக்கு:-

| | | |
|---|---|---|
| யோ. தவலிங்கம் | (நிரந்தர உறுப்பினர்) | - (416) 856-0408 |
| சி. குகனேந்திரன் | (நிரந்தர உறுப்பினர்) | - (905) 554-3306 |
| ம. உமாகரன் | (நிரந்தர உறுப்பினர்) | - (905) 554-3306 |
| சி. அச்சுதன் | (பொருளாளர் - பழைய மாணவர் சங்கம்-கனடா) | - (416) 836-6937 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லூரிக்கு வழங்கப்பட்ட நிதி விபரங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| 1994 – 1995 | கல்லூரிக்கு வழங்கிய வைப்புநிதி – விளையாட்டுத்துறை<br>(விளையாட்டுக்கழகமும், பழையமாணவர்சங்கமும் இணைந்து வழங்கியது) | | $5000.00 |
| 1997 – 1998 | நன்கொடை (காணி வாங்குவதற்கு) | | $5000.00 |
| 1999 – 2000 | நன்கொடை (புலமைப்பரிசுகள்) | | $480.00 |
| 2000 – 2001 | நன்கொடை (புலமைப்பரிசுகள்) | | $810.00 |
| 2001 – 2002 | நன்கொடை (புலமைப்பரிசுகள்) | | $880.00 |
| 2002 – 2003 | நன்கொடை (புலமைப்பரிசுகள்) | | $2000.00 |
| 2002 – 2003 | நம்பிக்கை நிதிய வைப்பு - புலமைப்பரிசு | | $15000.00 |
| 2002 – 2003 | நன்கொடை (காணி வாங்குவதற்கு) | | $21568.00 |
| 2003 – 2004 | நம்பிக்கை நிதிய வைப்பு – புலமைப்பரிசு | | $7150.00 |
| 2004 – 2005 | நூற்றாண்டுவிழா அலுவலகச்செலவு | | $655.00 |
| 2004 – 2005 | கணினிகள் பராமரிப்புச்செலவுகள் | | $900.00 |
| 2007 – 2008 | கணினி, தளபாடங்கள் கொள்வனவுச்செலவு | | $15000.00 |
| 2007 – 2008 | ஆங்கிலமொழி வகுப்பு உபகரணங்கள் கொள்வனவுக்காக அனுப்பியது | | $900.00 |
| 2007 – 2008 | நம்பிக்கை நிதிய வைப்பு - 6ம் வகுப்பு புலமைப்பரிசில்கள் (1ம் ஆண்டு) | | $2600.00 |
| 2007 – 2008 | ஹன்டி பேரின்பநாயகம் கட்டிட திருத்த வேலைக்காக அனுப்பியது | | $2000.00 |
| 2008 – 2009 | மைதானத்திருத்த வேலைச்செலவுகள் | | $3540.00 |
| 2008 – 2009 | நம்பிக்கை நிதிய வைப்பு - 6ம் வகுப்பு புலமைப்பரிசுகள் (2ம் ஆண்டு) | | $1200.00 |
| 2008 – 2009 | 2010ம் நூற்றாண்டுவிழா குழு – காணிவாங்குதல் | | $12080.00 |
| 2009 – 2010 | 2010ம் நூற்றாண்டுவிழா குழு – காணிவாங்குதல் | $ 2,830.00 | |
| 7-June-2009 | திருமதி. சரஸ்வதி ஏகாம்பரம் | $ 250.00 | |
| 9-Feb-2010 | திரு. மா. ஜேயமனோகரன் | $10,000.00 | $13,080.00 |
| 2009.`.2010 | நம்பிக்கை நிதிய - 6ம், 7ம் வகுப்பு புலமைப்பரிசில் கொடுப்பனவு | | $ 850.00 |
| | **மொத்தத் தொகை** | | **$110,693.00** |

## கொக்குவில் இந்துக்கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கத்தினரால் வழங்கிய நிதி விபரங்களும், பயன்பாடுகளும்

| தொ இல | முதலீட்டாளரும் நிதிப்பயன்பாடும் | திகதி | வங்கி | சான்றிதழ் இலக்கம் | கணக்கு இல | வட்டிக் காலம் | ஆரம்ப தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | கனடா ப.மா சங்கம் | | | | | | |
| 1 | புலமைப்பரிசு – Merit Pass | 03.09.2010 | BOC | 927435 | 70906251 | M | 270,000.00 |
| 2 | புலமைப்பரிசு – AL Students | 25.05.2010 | BOC | 926955 | 70499446 | M | 959,619.00 |
| 3 | புலமைப்பரிசு – Merit Pass | 17.03.2009 | Com.Bank | 894088 | 3060067398 | A | 100,000.00 |
| 4 | புலமைப்பரிசு – AL Students | 22.09.2004 | BOC | 939752 | 1162641 | M | 507,500.00 |
| 5 | உதைப்பந்தாட்ட விருத்தி | 21.06.2010 | BOC | 927072 | 70586774 | A | 908,000.00 |
| 6 | சுகிர்தா ரீச்சர் (SC Fund Canada OSA) | 21.08.2012 | Com.Bank | 195962 | 3060093738 | A | 1,200,000.00 |
| 7 | S.சுந்தரலிங்கம் மாஸ்ரர் (OSA Canada) | 21.08.2012 | Com.Bank | 195964 | 3060093739 | A | 128,000.00 |
| 8 | திரு.திருமதி.நாகலிங்கம் (OSA Canada) | 05.09.2016 | Com.Bank | 741780 | 3060126670 | A | 442,985.00 |
| 9 | O.S.A கனடா தரம் 6 – 11 வரை (50 ப. மாணவர்) | 03.05.2013 | P.Bank | Separate | - | A | 1,978,000.000 |
| 10 | திரு.திருமதி.விஜயராஜன் )கனடா) வழங்கும் ஞாபகர்த்தம் திருமதி.இராஜநாயகம் (ரதிமில்) | 30.04.2014 | BOC | 962584 | 75924751 | A | 118,000.00 |
| 11 | கனடா பழைய மாணவர் சங்கம் A/L மாணவர்கள் | 29.03.2016 | BOC | 753235 | 79008119 | A | 410,000.00 |
| 12 | கனடா பழைய மாணவர் சங்கம் A/L மாணவர்கள் | 05.09.2016 | BOC | 754329 | 79656041 | A | 300,000.00 |
| | | | **மொத்தம்** | | | | **7,322,104.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவில் வசிக்கும் எமது கல்லூரி பழைய மாணவர்கள் வழங்கிய நிதிகளும் மற்றும் நலன்விரும்பிகள் வழங்கிய நிதிகளும் அடங்கிய விபரங்களும் அதன் பயன்பாடுகளும்.

| தொ இல | முதலீட்டாளரும் நிதிப்பயன்பாடும் | திகதி | வங்கி | சான்றிதழ் இலக்கம் | கணக்கு இல | வட்டிக் காலம் | ஆரம்ப தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் கனடா | | | | | | |
| 1 | திரு.ரகு தேவராஜா, திருமதி சுகன்யா தேவராஜா (Canada) வருமாந்த (திறந்த) சதுரங்கப் போட்டி அமரர் திருமதி.S.சுகிர்தலக்ஷிமி ஞாபகார்த்தம் | 19.06.2012 | BOC | 587590 | 73352426 | A | 825,000.00 |
| 2 | திரு.ரொஷான் தேவராஜா (Canada) பரதநாட்டியம் க.பொ.த உயர்தரம், ரொஷான் பேர்த்தி அமரர் S.சுகிர்தலக்ஷ்மி ஞாபகார்த்தம் , பரத நாட்டியம் க.பொ.த சாதாரணதரம் , ரொஷான் பேர்த்தி அமரர் T.இந்திராணி ஞாபகர்த்தம் | 08.01.2013 | BOC | 741479 | 74214783 | A | 120,000.00 |
| 3 | திரு.ரகு தேவராஜா.திருமதி சுகன்யா தேவராஜா (Canada) தரம் 7, அமரர் N.P தேவராஜா ஞாபகார்ததம் | 29.04.2016 | BOC | 753566 | 79140997 | A | 434,265.00 |
| 4 | திரு. ரகு தேவராஜா, திருமதி சுகன்யா தேவராஜா (Canada) அதிபர் விருதுகள் கணிதத்துறை அமரர் V.C.இராமநாதன் ஞாபகார்த்தம், விஞ்ஞானத்துறை அமரர் C பாலகிருஸ்ணன் ஞாபகார்த்தம், தொழில்துறை அமரர் S.சுகிர்தலக்ஷ்மி ஞாபகார்த்தம், வர்த்தகத்துறை திரு.V.கணேசலிங்கம் கௌரவிப்பு, கலைத்துறை அமரர் V.பவசிங் ஞாபகார்த்தம், மேற்கூறப்பட்ட விருதுகளில் முதன்மை விருது அமரர் N.P.தேவராஜா ஞாபகார்த்தம் | 19.02.2010 | **BOC** | 915496 | 70192081 | A | 520,000.00 |
| 5 | திரு.ரகு தேவராஜா, திருமதி சுகன்யா தேவராஜா (Canada) கர்நாடக சங்கீதம் க.பொ.த. சாதாரணதரம், அமரர்கள் T.இந்திராணி, N.P.தேவராஜா ஞாபகார்ததம் | 21.01.2011 | **BOC** | 927748 | 71429082 | A | 211,000.00 |
| 6 | திரு.ரகு தேவராஜா, திருமதி சுகன்யா தேவராஜா (Canada) கர்நாடக சங்கீதம் க.பொ.த. உயர்தரம், அமரர் T.இந்திராணி, ஞாபகார்ததம் | 04.03.2011 | BOC | 549261 | 71562264 | A | 212,180.00 |
| 7 | திரு.சசிதரன் சுப்பிரமணியம் (Canada) தரம் - 10 அமரர் Dr.ருபிணி சிவானந்தன் ஞாபகார்த்தம் | 05.09.2016 | BOC | 754330 | 79656110 | A | 375,000.00 |
| 8 | திரு.நவரட்ணம் யோகசுந்தரம் திருமதி.யோ.அனுசியாதேவி (Canada) கல்வி சார்ந்தது | 22.12.2009 | BOC | 915319 | 70016957 | A | 200,000.00 |
| 9 | Dr.சு.சுதாகர், Dr.திருமதி. நகுலேஸ்வரி சுதாகர் (Canada) தரம் 12 அமரர்கள் க.சுப்பிரமணியம் , S.சுகிர்தலட்சுமி ஞாபகார்ததம் | 05.09.2016 | BOC | 754328 | 79656121 | A | 377,795.00 |
| 10 | திரு.ரவிச்சந்திரன், திருமதி.தயாழினி ரவிச்சந்திரன் அமரர் திருமதி சிவயோகம்மா சுப்பிரமணியம் ஞாபகார்த்தம் பரிசி விலசாயபீடத்திற்கு தெரிவானோர் | 09.07.2010 | BOC | 927180 | 70652516 | A | 100,000.00 |
| 11 | திருமதி A.முத்துலிங்கம் (Canada) வழங்கும் ஞாபகார்த்தம் திருமதி.ராசம்மா அப்பாத்துரை, க.பொ.த சா.த தமிழ்பாட அதிவிசேட சித்தி பரிசு | 09.11.2009 | BOC | 915155 | 9885979 | A | 106,000.00 |
| 12 | சுட்டத்தரணி சுப்பயா சின்னத்தம்பி (Canada) பரிசில் பல்கலைக்கழக அனுமதி | 25.07.2007 | BOC | 710862 | 6801993 | A | 100,000.00 |
| 13 | திருமதி கவிதா பாலகுமார் (Canada) அபிவிருத்தி கூடைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் | 11.09.2018 | BOC | 1372331 | 83152770 | A | 100,000.00 |
| 14 | ஆதிகூடிய புள்ளிகள் பெற்ற தமிழ் பாடத்திற்கும் தேசியமட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கும் பண்டிதை அமுதவல்லி இராசையா நினைவாக அவரது சகோதரியால் அன்பளிப்பாக வழங்கப்படும் புலமைப்பரிசு, கொக்குவில் நாகரட்ணம் பொன்னையா அவரது மகன் ரமா இரஞ்சன்(கனடா) அவர்களால் வழங்கப்பட்டது. | | | | | | 100,000.00 |
| | மொத்தம் | | | | | | **3,781,240.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசுகள்



கனடா பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசுகள் தரம் 06 - 2019



கனடா பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசுகள் தரம் 07 - 2019



கனடா பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசுகள் தரம் 08 - 2019



கனடா பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசுகள் தரம் 09 - 2019



கனடா பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசுகள் தரம் 10 - 2019



கனடா பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசுகள் தரம் 11 - 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
Kokuvil Hindu College
OLD STUDENTS' ASSOCIATION

O.S.A.T.P No.021-222 5088
e-mail : khcosa@yahoo.com
web: www.khcjaffna.com

Kokuvil Hindu College,
Kokuvil,
Sri Lanka.

## தாய்ச்சங்கத் தலைவரின் வாழ்த்துச்செய்தி



கொக்குவில் இந்துக் கல்லூரி அன்னையினை நினைந்து தாய்ச்சங்க சர்வதேச உறவினால் பேணிவரும் கனடா பழைய மாணவர் சங்கக்கிளை தனது இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்ற விழா நிகழ்வுகளையொட்டி வெளியிடப்படும் "மகுடம் - 2019" மலருக்கு வாழ்த்துச்செய்தி பகிர்ந்து கொள்வதில் மனமகிழ்வெய்துகின்றேன்.

வட அமெரிக்காவின் கனடா பழைய மாணவர் சங்கக் கிளையானது "கொக்குவில் இந்து நமதே" என்ற உள்ளத் துடிப்புடன் உயிர்த்துடிப்புள்ள பழைய மாணவர்கள் புலம்பெயர்ந்த தேசங்களி லிருந்தாலும் தான் கற்ற கல்லூரியினைப் பெருமிதம் கொள்ளும் வகையில் ஆண்டுதோறும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம், ஞாபகார்த்த பரிசில்கள் போன்ற கல்வித் துறை சார்ந்த பணிகளையும் பௌதிக விரிவாக்கம் மற்றும் விளையாட்டுத் துறைக்கான மாதாந்த உதவுதொகைக் கொடுப்பனவு போன்றவற்றைத் தொடர்ந்து வழங்கி கல்லூரியின் இயக்கவியல் தன்மைக்கு ஊக்கவிசையாகத் தொழிற்படுவது எமக்கு மகிழ்வையும் நிறைவையும் தருகின்றது.

கல்லூரியின் நிலையான பேண்தகு விருத்திக்கு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அயர்வின்றிச் செய்து வரும் கனடாக்கிளையின் பணிகள் எதிர்காலத்தில் பெரும் பணிகளாகத் தொடரவும் இருபத்தைந்தாவது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெறவும் வெளியிடப்படவிருக்கும் "மகுட மலர்" மணம் பரப்பும் இனிய வெள்ளிவிழா மலராகவும் உருவாக்க உழைத்த செயற்குழுவினர் அனைவரையும் தாய்ச்சங்கம் பாராட்டுவதோடு அவர்களின் இப்பணி மென்மேலும் தடையின்றித் தொடர எல்லாம் வல்ல கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய முருகப் பெருமான் அருள்பாலிக்க வேண்டுமெனத் திருவடி பணிந்து வாழ்த்துகின்றேன்.

திரு. ஆ. ந. தேவசகாயம் ஜெயக்குமார்
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம்
## Kokuvil Hindu College
# OLD STUDENTS' ASSOCIATION

## பழைய மாணவர் சங்க செயலாளரின் வெள்ளி விழா வாழ்த்துச் செய்தி

கொக்குவில் இந்துக்கல்லூரி கனடா பழைய மாணவர் சங்க கிளையின் 25 வது வருடாந்த விருதுகள் இரவு நிகழ்வினை அடையாளப்படுத்தும் முகமாக வெளியிடப்படும் **"மகுடம் 2019"** மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**"கற்றதொழுகு"** எனும் தாரக மந்திரத்தை மனதில் நிறுத்தி கொக்குவில் இந்துவின் பிள்ளைகள், அதன் வழி கனடா பழைய மாணவர் சங்கத்தினர் இன்று வெள்ளி விழா கொண்டாடுகின்றார்கள்.

பல வருடங்களாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு வரும் ஓர் உயரிய பணியினை கனடா கிளையினர் செய்து வருகின்றனர். கல்லூரியின் வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்தல், பொருளாதார ரீதியில் பின் தங்கிய மாணவர்களின் பொருளாதார உதவிகள், போன்ற பல செயற்பாடுகளை செய்து வருகின்றனர். குறிப்பாக கனடா பழைய மாணவர் சங்கத்தினர் தாய் சங்கத்தினூடாக பல தேவைகளை கண்டறிந்துள்ளனர். அதன் முதற் படியாக கூடைப்பந்தாட்ட துறைக்கு பயிற்றுவிப்பாளர் ஒருவரை நியமித்து அவருக்கு மாதாந்த கொடுப்பனவினை வழங்கி கூடைப்பந்தாட்ட துறை வளர்ச்சி பாதையில் செல்ல உதவி வருகின்றமை யாவரும் அறிந்த விடயம்.

அதோடு மட்டும் நின்று விடாது வெளிநாட்டு பழைய மாணவர் சங்கங்களுடன் ஒன்றினைந்து கல்லூரி அன்னையின் வளர்ச்சிப் பாதையில் காலம், நேரம் பார்க்காது தோளோடு தோள் நின்று ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற பணி பாராட்டுக்குரியவை. மேலும் கல்லூரியின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு எல்லா பழைய மாணவர் சங்கங்களும் ஒருமித்து செயற்பட வேண்டும் என்பதே எனது அவா.

கல்லூரியின் பாரிய வளர்ச்சியில் அர்ப்பணிப்போடு செயலாற்றி விழாவினை ஒழுங்கு செய்த கனடா கிளையின் 2018 – 2019 ஆண்டுக்கான தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் தாய்சங்கத்தின் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன், எதிர்காலத்தில் கனடா பழைய மாணவர் சங்கத்தினரின் பணிகள் மேன் மேலும் சிறப்புற இறைவனை வேண்டுகின்றேன்.

**விக்னேஸ்வரன் தயாபரன்** (சமாதான நீதவான்)
செயலாளர்,
கொக்குவில் இந்துக்கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

Kokuvil Hindu College,
Kokuvil,
Sri Lanka.

e.mail :- khcosajf@gmail.com
Web :- www.khcosa.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kokuvil Hindu College
# OLD STUDENTS' ASSOCIATION TRUST
# கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்

Reg. No :- 11524
Estd. 06.11.2002

E-mail : kokuvilhinducollegeosatrust@gmail.com

Patron :
Mr.M.Subramaniam
Prop.Ragu International (Pvt) Ltd
38B, Shrubbery Gardens,
Colombo - 4.
T.P : 0112590630

President :
Mr.A.Panchalingam
Emeritus Principal,
Kopay Road,
Urumpirai.
T.P : 021 2230754
Mob : 077 6565258

General Secretary :
Mr.R.Selvanathan (J.P)
Maniyarpathy Lane,
Kokuvil West, Kokuvil.
T.P : 021 2052098
Mob : 075 6825890

Treasurer :
Mr.A.Sreetharan (J.P)
Katpakapillayar Kovilady,
Uduvil East, Chunnakam.
T.P : 021 2241796
Mob : 0777770517

Committee Members :
Mr.P.Kamalanathan
Emeritus Principal,
T.P : 021 2242175

Mr.S.Sriganeshan
Prop. Barani Drugs
T.P : 0776157389

Mr.S.Varatharajeswaramuthaly
Rtd.Superintendent of
Construction work
T.P : 021 3008598

Mr.A.Sathiyamoorthy
Manager, People's Bank.
T.P : 021 2052676

Ex. Officio Members
1. Principal K.H.C, T.P : 0212222646
2. President O.S.A. Jaffna
3. Secretary O.S.A Jaffna
4. Treasurer O.S.A Jaffna

Internal auditor
Mr.T.Pirithivaraj
Manager, Bank of Ceylon.
T.P : 021 2227453



### 25வது வருட ஆண்டுவிழா மலருக்கான (மகுடம்) கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்தின் வாழ்த்துச்செய்தி

கொக்குவில் இந்துக்கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கமானது தனது 25வது வருட பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படும் மகுடம் மலருக்கும், விழாவிற்கும் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம்.

நம்பிக்கை நிதியம் ஆரம்பித்த காலத்தில் கனடா பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து வழங்கிய நிதிகள் கனடா பழைய மாணவர் சங்கத்தினூடாக அனுப்பியமை நிதியம் வளர வலுவூட்டியது. இவர்கள் அனுப்பிய நிதிகள் அனைத்தும் நிதியத்தினால் நிதியத்தின் பெயரில் நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளன. இதனால் கிடைக்கும் வருமானங்கள் கனடா சங்கத்தினரினால் வழங்கிய அறிவுத்தல்கள், வேண்டுதல்களுக்கு இணங்க நம்பிக்கை நிதிய முகாமைத்துவத்தால் பேணப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

மாணவர்களின் கல்வி மேம்பாடு, விளையாட்டு அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் நலன்கள் போன்றவற்றை அடிப்படையாக கொண்டே இவ் வருமானங்கள் பயன்படுத்தப்படுகின்றது. கனடா பழைய மாணவர் சங்கத்தினூடாக நம்பிக்கை நிதியத்திற்கு கிடைக்கப்பெற்ற நிதிகள் மொத்தம் இலங்கை ரூபாவில் 7.32 மில்லியன் நிதியத்தின் கணக்கில் நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது. பெருந்தொகை, நிதிகள் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அனுப்பியமை பாராட்டுக்குரியதும், நன்றிக்குரியதுமாகும்.

இச்சங்கமானது மாணவர்களின் புலமைப்பரிசில் நிதிகள் வழங்கி வருவதுடன் கல்லூரியின் பௌதீகவளங்கள், மைதான விரிவாக்க அபிவிருத்தி, கல்வி சாரா நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு உதவி வருவதும் குறிப்பிடத்தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும்.

வருடாவருடம் கல்லூரி அன்னையை நினைவுகூர்ந்து கனடா கல்லூரியின் முன்னாள் மாணவர்களினால் முன்னெடுக்கப்படும் பெருவிழாவும், "மகுட" மலர் வெளியீடும் சிறப்பாக அமைய வேண்டுமெனவும் புலம் பெயர்ந்து கனடாவில் வசிக்கும் கல்லூரி பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எல்லோரும் எல்லா வளங்களும் பெற்று குடும்பசகிதம் நலமுடன் வாழ வேண்டுமென கல்லூரி குல தெய்வமான கொக்குவில் கிருபாகர் சிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டிநிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kokuvil Hindu College
## OLD STUDENTS' ASSOCIATION TRUST
## கொக்குவில் இந்துக் கல்லூரி
### பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்

Reg. No :- 11524
Estd. 06.11.2002
E-mail : kokuvilhinducollegeosatrust@gmail.com

**Patron :**
Mr.M.Subramaniam
Prop.Ragu International (Pvt) Ltd
38B, Shrubbery Gardens,
Colombo - 4.
T.P : 0112590630

**President :**
Mr.A.Panchalingam
Emeritus Principal,
Kopay Road,
Urumpirai.
T.P : 021 2230754
Mob : 077 6565258

**General Secretary :**
Mr.R.Selvanathan (J.P)
Maniyarpathy Lane,
Kokuvil West, Kokuvil.
T.P : 021 2052098
Mob : 075 6825890

**Treasurer :**
Mr.A.Sreetharan (J.P)
Katpakapillayar Kovilady,
Uduvil East, Chunnakam.
T.P : 021 2241796
Mob : 0777770517

**Committee Members :**
Mr.P.Kamalanathan
Emeritus Principal,
T.P : 021 2242175

Mr.S.Sriganeshan
Prop. Barani Drugs
T.P : 0776157389

Mr.S.Varatharajeswaramuthaly
Rtd.Superintendent of
Construction work
T.P : 021 3008598

Mr.A.Sathiyamoorthy
Manager, People's Bank.
T.P : 021 2052676

**Ex. Officio Members**
1. Principal K.H.C, T.P : 0212222646
2. President O.S.A. Jaffna
3. Secretary O.S.A Jaffna
4. Treasurer O.S.A Jaffna

**Internal auditor**
Mr.T.Pirithivaraj
Manager, Bank of Ceylon.
T.P : 021 2227453

மாணவர்களின் நலன்களுக்காக நிதிகள், கனடா பழைய மாணவர் சங்கத்தினால் இதுவரை வழங்கிய நிதிகள், கனடாவில் வசிக்கும் எமது கல்லூரி பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் வழங்கிய நிதிகள் அனைத்தினதும் பயன்பாடுகள், விபரங்களை தங்களுக்கு தங்களின் வேண்டுதலுக்கிணங்க - அனுப்பி வைக்கின்றோம்.

தங்கள் உதவிகளினால் மாணவர்களுக்கு வழங்கும் புலமைப்பரிசில் நிதிகள் இலங்கை நாணயத்தின் பெறுமதி குறைந்து செல்கின்ற வேளையிலும் மற்றும் வங்கியினால் வழங்கப்படும் வட்டி வீதங்களின் மாற்றங்களினாலும் மாணவர்களின் கொடுப்பனவுகளுக்குப் போதாமையாக உள்ளது என்ற தகவலையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

இவ்விழாவில் எமது நிதியத்தின் ஸ்தாபகர்களின் தலைவர் ஒருவரும், நிதியத்தின் தலைவரும், எமது கல்லூரியின் மூத்த முன்னாள் அதிபரும் ஆகிய திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் முதன்மை விருத்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப் படுவதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம். இவ் விழாவினையும் சங்கத்தினையும் முன்னெடுத்து செல்கின்ற சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், விழாக்குழுவினர் மற்றும் சங்கத்தை வளர்த்தெடுத்த முன்னான் சங்க நிர்வாகிகள், நலன்விரும்பிகள் எல்லாருக்கும் எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மனநிறைவு அடைகின்றோம்

இ.செல்வநாதன் J.P
(நகுலன்) செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Message from the President
## Kokuvil Hindu College (OSA) Colombo

I consider it an honour and privilege in sending my message and best wishes as the President of the KHC (OSA) Colombo for the Silver Jubilee of "MAHUDAM 2019" celebrations being held in Canada.

The old students of Kokuvil Hindu College living in Canada have made their contributions towards the development of our "Alma Mater" continuously for the last 25 years. It is appropriate that the OSA-Canada is celebrating its Silver Jubilee celebrations of MAHUDAM in a grand manner in 2019.

Kokuvil Hindu College, as a school in a village, has an unparalleled history of over a century in academics as well as in sports in the northern part of Sri Lanka. It has produced many eminent personalities in a vast spectrum of professions nationally and globally who are proud call themselves as old students of Kokuvil Hind College.

A large number of our old students of KHC, after leaving the school unable to continue their studies or find career path, had to leave Sri Lanka and take residence in abroad due to the war situation that prevailed in the country during 80s and 90s. Many of them found their residence in Canada. We are very proud to see them doing well in life today and happy to note them returning their debt to the "Alma Mater" by contributing to the development of the school in number of ways.

It is also a time to remember the great services rendered by our past principals and teachers who not only maintained a high standard of education in the school but also ensured discipline among the students in our time.

On behalf of the KHC (OSA) Colombo, I wish to take this opportunity to thank all the members of the OSA-Canada for your continuous support to our "Alma Mater" and congratulate all, especially, the President and the Members of the Executive Committee of OSA – Canada for organizing this grand event.

Our best wishes for Silver Jubilee Celebrations, "MAHUDAM 2019" and "Awards Night"!

**S. RAJENDRAN**
**President**
**KHC OSA (Colombo)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.இ)

# Kokuvil Hindu College Old Students Association (UK)

Registered Charity No: 1106355
satkin.khc@gmail.com
www.kokuvilhindu.com

**President**
**Dr R. Karunakaran**
**07510924054**

**Vice Presidents**
Mr S. Sriranjan
Mr N. A Pirapaharan
Mr S. Selvaratnam

**Secretary**
**Mr S. Satkunanathan**
**07766 562557**

**Asst.Secretary**
Mr J. Senthilkumar

**Treasurer**
**Mr N.Prabaharan**

**Asst. Treasurer**
Mr N. Ravikumar

**Sports Secretary**
**MrS.Kandeepan**
**Asst.Sports Secretary**
Mr Arulraj


**Committee Members**
Mr S Thedchenamoorthy
Mr N.Nanthagopan
Mr S. Sri Vijaya
Mr A. Arunachalam
Mr S. Sivarajah
Mr A.S.Pirapagaran
Mr N. Nanthakumaran
Mr M. Kirishnavenan,
Mr S Karunagaran

**Co-Opted Members**
Mrs S.Mahalingam
Mr M. Arichanthiran
Mr R. Satheeskaran
Mrs G.Balasubramaniam
Mrs S.Renukanthan
Mr M Jeyakumar
Mrs S.Murugaiya
Mrs S.Gunaratnam
Mr. P. T. J. Oyalood
Mr R.Vigneswaran
Mrs Singam
Mrs Satchithannntham
Mr Paranthaman

**Auditor**
Mr G. Chettiar

**Patrons**
Principal: Mr Gnannshambanthan
Mr S. Kanagasundaram
Dr P. Arumugaraasah
Mr R. Rajahmaheswaran
Dr K Satpasorubarajah
Mr Kanthapillai

## Message from the President



I am really proud and have great privilege in delivering my message and best wishes on behalf of our association to "Mahudam 2019". In addition, we are pleased to hear that our former Principal, Mr Panchalingham is a chief guest for your celebration. This programme will bring over a thousand people in the audience under the name of our school "Kokuvil Hindu College." This would not be possible without the contribution and hard work from each and every member of your association. I would like to take this opportunity to thank your Executive Members for their hard work in order to deliver this programme.

You are celebrating your 25th year, should not forget your progression path over the years and your members' determination and contributions. This level of an extraordinary association is not possible without your members and well-wishers dedication, determination and contribution; KHCOSA (UK) is very much thankful to you all.

Canada OSA's well-established scholarship fund to students at all grades and disciplines are impressive. A number of students, including pupils entering university, are benefiting from this programme.

Canada OSA closely works with our local Kokuvil OSA to understand school needs, particularly sports activities, on a regular basis. The contributions and support from old students of Kokuvil Hindu College living in Canada are well appreciated; we encourage Canada members to continue their effort on achieving goals to help our school.

In addition to annual Mahudam celebration, Canada OSA's annual Sports Day and BBQ Gathering are really connecting people. We wish you to continue these events to encourage community spirit.

On behalf of KHCOSA-UK, I wish to take this opportunity to thank Ravi and his committee members and well-wishers of the OSA-Canada for their hard work and continuous support to our school developments and to the community. In addition, to celebrate Mahudam, I am pleased to say that our Vice President Mr N A Pirapaharan will be attending on-behalf of KHCOSA (UK). All the best and wishes for a successful 25th year Mahudam Celebrations.

Thanking You

Dr Karunakaran (A/L – 1981 batch)

President, KHCOSA (UK)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TOP QUALITY PLASTICS LTD

ACRYLIC TQP FABRICATION

www.topqualityplastics.com

43 Wentworth Court, Unit 1A
Brampton, ON L6T 5L4
PH 905-629-8264
FAX 905-799-8003
TOLL FREE: 1-866-638-7812

Top Quality Plastics Ltd is a Canadian based plastic manufacturing and fabrication company located in the Greater Toronto Area. Formed in 1998 with its headquarters in Brampton Ontario, it caters to different industry plastic users on all levels, providing them with excellent project customizations and work. TQP holds a 25,000 square feet state of the art fabrication facility with advance technology machinery and skilled labour who take pride in their body of work. TQP found early success servicing clients throughout Canada and in USA specializing in POP Displays, in store fixtures, and merchandising units for Canadian and multinational global recognized brands such as Michael Kors and Telus.








Top Quality Plastics Ltd Have a printing facility with capability to print on 100" X 60" size material includes acrylic, styrene, banners, paper and more countless medias. Ink-jet printing technology with capable to print 1080 DPI which makes incredibly sharp images.














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்த்துச் செய்தி**



கனடாவில் இயங்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் தமது 25ஆவது நிறைவைக் கொண்டாடும் முகமாக வெளியிடுகின்ற **"மகுடம்"** இதழுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். உலகமெங்கும் பரந்துபட்டுவாழும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் தாங்கள் படித்த கல்லூரி அன்னையை மறவாது கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளின் வளர்ச்சிக்கு பலவேறு வகைகளில் உதவிகளை எமது கல்லூரிக்கு வழங்கிவருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

**"கற்றதொழுகு"** என்ற எமது கல்லூரியின் தாரக மந்திரத்திற்கமைய உலகமெங்கும் வாழும் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழையமாணவர்கள் மிகவும் உன்னதமாக நிலையில் வாழ்ந்துவருகின்றனர். பலநாடுகளில் இயங்கும் பழையமாணவர் சங்கங்கள் ஒன்றிணைந்து ஒரு நிகழ்வை நடாத்த அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும். பழையமாணவர்களின் ஒற்றுமை, அன்பு, நட்பு என்பவற்றை உலகளாவியரீதியில் அது மேலும் பலப்படுத்தும் என எண்ணுகின்றேன்.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாக் கிளை தனது 25ஆவது ஆண்டு நிறைவை கொண்டாட இருக்கும் இந்தத் தருணத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சிட்னிகிளையின் தலைவர் ஆகிய நானும் எமது நிர்வாக உறுப்பினர்களும் **"மகுடம்"** விழாவும் இராப்போசன ஒன்றுகூடல் நிகழ்வும் மிகவும் சிறப்பாக நடைபெற நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

நன்றி.

**சின்னராசா தணிகைராஜன்**

தலைவர்
கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமானவர் சங்கம்
சிட்னி, அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS ASSOCIATION (VICTORIA) AUSTRALIA INC

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் (விக்ரோறியா) அவுஸ்ரேலியா

A.B.N: 35 701 259 728 Email: khcosavic@hotmail.com

**President**
Mr.S.Dushyanthan
M-0411 598 504

**Vice-President**
Mr.T.Nadanakumar
M- 0402284259

**Secretary**
Dr.N. Thayalakumaran
M-0468 962 792

**Asst. Secretary**
Mr.R.Thavakumar
M-0427 235 380

**Treasurer**
Mr.V.Paranthaman
M-0417 139 629

**Asst. Treasurer**
Mr.S. Murugananthan
M-0431 666 306

**Committee Members**
Mr.R.Sriratnam
Mr.S.Tharshan
Mr.B.Mayuran
Mr.T.Rasakumar
Mrs.J.Dushyanthan
Mrs.S.Ratnagopal



It gives me great pleasure in sending this message of felicitation to the souvenir to be published for the occasion of the 25th annual cultural show and silver jubilee celebration "Mahudam 2019"

The old students of Kokuvil Hindu College are scattered all over the world and have formed old student associations wherever they went to unite them together and to help the alma mater.

This is an event where our Kokuvil Hindu College fraternities feel their youthfulness recollecting their school memories and enjoy in their hearts.

On behalf of Kokuvil Hindu College Old Student Association (Victoria) Australia, I would like to congratulate Kokuvil Hindu College Old Student Association, Canada on their dedication and their effort to stage the event, "Mahudam 2019".

I hope "Mahudam 2019" will be a great success.

Yours sincerely,
Siva Dushyanthan
President
K.H.C O.S.A (Victoria)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயர்ந்தவர்

## நான் மறக்க முடியாத நிகழ்ச்சி



R. மகேந்திரன்
கொ.இ.க. முன்னாள் அதிபர்

முதல்முதலாக கனடா வருகின்றபோது பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் எனது மூக்குக் கண்ணாடியை கை தவறவிட்டு விட்டேன். கண்ணாடி இல்லாமல் மிக மிக சிரமப்பட்டேன். அந்த சந்தர்ப்பத்தில் குணரஞ்சன் என்னைத் தேடி வந்தார். கூட்டிச் சென்று கண் வைத்தியரிடம் காட்டினார். இரண்டே நாட்களில் வீடு தேடி வந்து புதிய மூக்குக் கண்ணாடி தந்த எனது மாணவனின் அன்பு என்னை திக்கு முக்காட வைத்தது. அவர் நான் கேட்காமலே எனக்கு செய்த பல உதவிகள்; யாரிடம் சொல்லி அழுவது?

அவரைப் பற்றிய குறிப்புகள் மனதில் மாறி மாறி வந்து கொண்டே இருக்கின்றன. 1955ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி குணரஞ்சனின் பிறந்த திகதியாகும். அதேமாதிரி அவரது திருமணநாள் ஏப்ரல் 5ஆம் திகதி 1985. மனோவுடன் தொடங்கிய இனிய இல்வாழ்க்கை அவரது வாழ்க்கையில் பல புதிய மாற்றங்களை கொண்டு வந்தது. ரிச்மண்ட்கில் ஆலயத்திற்குரிய மண்டபத்தில் நடந்த முதலாவது திருமணம் இதுவாகும். நல்லதொரு ஆரம்பம். 1989ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி அன்பு மகன் பிறந்த நாளாகும். அன்பு மகள் 1997ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அவதரித்தாள். இதுதான் குணரஞ்சனின் அழகிய குடும்பம்.

1986ஆம் ஆண்டு Bright Optical என்ற நிறுவனம் குணரஞ்சனின் முயற்சியால் ஆரம்பமானது. கணவனும் மனைவியுமாக செயல்பட்ட முறை அற்புதமானது. இருவரது உழைப்புத் திறனும் மகத்தானது. 1994ஆம் ஆண்டு மெயின் வீதியில் OPTIMARTT ஆரம்பமானது. இன்றுவரை அந்த நிறுவனம் கனடாவில் தனக்கெனத் தனியிடம் பெற்றுத் திகழ்கிறது. இந்த வெற்றி இவர்களது கணவன் மனைவியினது உயர்ந்த உழைப்பினால் வந்ததாகும். குணரஞ்சனின் உயிர்நாடி அவரது மனைவியாவர். எது செய்தாலும் மனோவின் விருப்பமே அவரது விருப்பமாகும். இன்று அவரது அன்பு மகளும் அருமை மகனும் OPTIMART நிறுவனத்தில் இணைந்து செயலாற்றுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது உழைப்பின் உயர்வு எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பட்டது. TVI தொலைக்காட்சி 'உழைப்பால் உயர்ந்தவர்' என்று பாராட்டி நேர்காணல் நிகழ்ச்சியில் அவரைப் பெரிதும் பாராட்டியது. 2015ஆம் ஆண்டு Chamber of Commerce இவருக்கு விருது வழங்கி கௌரவப்படுத்தியது. குனடா, கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் தனது மகுடம் கலை நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக அழைத்து அவரைப் பெருமைப்படுத்தியது.

குணரஞ்சன் மிகவும் தன்னடக்கமாக பல உதவிகள் செய்திருக்கின்றார். உதாரணமாக Toronto General Hospital வளர்ச்சிக்கு $15,000 நன்கொடை கொடுத்துள்ளார். கொக்குவில் இந்துக் கல்லூரிக்குக் கடைசியாக சென்றபோது ஸ்தாபகர் செல்லையா மண்டபம் அமைத்தால் தனது பங்காகப் பத்து இலட்சம் ரூபா தருவதாகக் கூறியுள்ளார். எமது சங்கத்திற்குத் தொடர்ந்து பல நிதியுதவிகள் செய்து வந்துள்ளார். இவரது இரக்க மனம், இனிய சுபாவம் மறக்க முடியாதவை.



எமது பழைய மாணவர் சங்கத்தோடு நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார். வருடாந்த வெளிக்கள விருந்துகள் எல்லாவற்றிலும் தவறாது பங்கு பற்றியவர். உதாரணமாக ஒன்றை எடுத்துக் கூற விரும்புகின்றேன். வெளிக்கள விருந்து நடைபெறும் நாளில் காலை ஏழரை மணிக்கே என்னோடு தொடர்பு கொள்வார். "சேர், நான் இன்னும் பத்து நிமிடத்தில் உங்களை கூட்டிக்கொண்டு போக வந்து விடுவேன்" என்று கூறி கூட்டிச் செல்வார். இதில் அவர் தவறியதே கிடையாது. அதேமாதிரி முன்னாள் தலைவர்கள் ரவி மோகன், மகேந்திரன் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார். அவர்களின் வெற்றிக்குத் துணையாக இருந்துள்ளார். தனது மகனின் நடன அரங்கேற்றத்திற்கு தனது கல்லூரியின் அதிபரையே பிரதம விருந்தினராக அழைக்க வேண்டும் என விரும்பி அழைத்தார். அவர் கல்லூரி மீதிருந்த ஈடுபாட்டால்தான் அதனைச் செய்தார் என்பதுதான் உண்மையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAPLE Furniture Inc.

simply elegant

**SPECIALIZED KITCHEN, BATHROOM VANITIES, AND LIVING INTERIORS.**

**We build high quality custom-built fine woodworking products.
We work closely with our clients to ensure exquisite products and only highest-quality products go into our custom interiors.
We strongly believe in honesty and integrity.**





**Kitchen
Cabinets
Vanities
Countertops**



Showroom / Office

400 Finchdene Sq. #19
Scarborough, ON M1X 1E2

Tel: (416) 913-4420 Fax: (416) 913-4421
Email: info@maplefurnitureinc.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி சாரணர் இயக்க வைர விழா_(1943 - 2018)

## வரலாறு படைத்த 'முருகண்டி புலமைப்பரிசில் நிதியம்'

2018ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரி சாரண இயக்கத்தின் வைரவிழா ஆண்டு. இந்த நிகழ்வினை மிகவும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தது எமது கொக்குவில் இந்து. பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த சாரணர்கள் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மூன்று நாட்களுக்குப் பாசறை அமைத்து வரலாறு படைத்தனர். இத்தகைய நிகழ்ச்சி வேறு எப்பொழுதும் நடந்ததில்லை என்றே கூற வேண்டும். இவர்களது 'பாசறைத் தீ' நிகழ்ச்சியில் ஓய்வு நிலை அதிபர் மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் வைரவிழா நடைபெற்றது. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் குறிப்பிடத் தக்கதாகும். இவ்விழாவில் சில முக்கிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபரும் முன்னாள் மாவட்ட சாரண ஆணையாளருமான இ. மகேந்திரன் கலந்து கொண்டார்.

கொக்குவில் இந்துவின் 'சாரணியன்' (இதழ் 2) பவளவிழா மலர் வெளியிடப்பட்டது. இம்மலருக்கு நிதி அனுசரணை வழங்கிய சரவணநாதன் பாலசொரூபி குடும்பத்தினர் கௌரவிக்கப்பட்டனர். நூலின் மதிப்புரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பாலசுந்தரம் பிள்ளை வழங்கினார்.

'முருகண்டி புலமைப்பரிசில் நிதியம்' அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமை வைரவிழாவின் சிறப்பம்சமாக அமைந்தது. இலங்கை ரூபாயில் 25 இலட்சத்தினை இலங்கை வங்கியில் வைப்பிலிட்டு நிதியம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நிதியினை வழங்கிய நவநேசன் (கனடா) தனது பெற்றோரின் பெயர் சிறக்க இக்கொடையினை வழங்கினார். அவரது பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிதி முறைப்படி சட்ட ரீதியாகப் பதியப்பட்டுள்ளது. இந்த நிதியின் யாப்பும் பதியப்பட்டுள்ளது. இந்த நிதி மூலம் வருடாவருடம் பெறப்படும் வட்டி வருமானம் (சுமார் இரண்டு இலட்சத்திற்கு மேல்) கல்லூரியின் சாரண இயக்க வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படும். பவளவிழாவின் போதே இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி விருது பெற்ற சாரணர்களுக்குப் பணப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. சாரண இயக்க வளர்ச்சிக்கு உதவிவரும் பழைய சாரணர்கள் சிலரும் கௌரவிக்கப்பட்டுப் பணப்பரிசும் வழங்கப்பட்டது. இவை யாவும் நவநேசன் அவர்களால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிதியின் மூலம் எமது கல்லூரி சாரணர் இயக்கம் எவ்வாறு பயன்பெறும் என்பது விளக்கப்பட்டது.




இலங்கையின் சாரண இயக்க வரலாற்றில் எந்தவொரு கல்லூரியிலும் இவ்வளவு பெருந்தொகை வைப்பில் இடப்பட்டு சாரண நிதியம் அமைக்கப்பட்டதில்லை. இந்த நிதியின் செயற்பாடுகளுக்கு உதவியாக சாரணர் உபகுழுவொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியினை உருவாக்கிய நவநேசன் அவர்களை ஓய்வுநிலை அதிபர் மகேந்திரன் பெரிதும் பாராட்டிக் கௌரவித்தார். நிகழ்வின் இறுதியில் மதியபோசன விருந்தும் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு!



ஞா. ஆரணி

2015 ஒகஸ்ரில் வெளிவந்த காணொளி ஒன்றில் ஓர் ஆமையின் மூக்கிலிருந்து plastic straw ஒன்றை எடுக்கும் காட்சி உலகமெங்கும் பரவியது. ஆமையின் பரிதாபநிலையைக் கண்டு பலர் கவலையும் அடைந்தனர். இதனால் 2018ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பல மாநிலங்களும், பல நிறுவனங்களும் plastic strawக்களைத் தடைசெய்தன. இப்பொழுது இங்கிலாந்து உட்பட பல ஐரோப்பிய நாடுகளும் plastic strawக்களையும், ஒருமுறை மட்டும் பாவிக்கப்படும் plastic பொருட்களையும் தடை செய்யப்போகின்றன.

மீள் சுழற்சி செய்யப்படுகின்றபொழுது மிகவும் சிறிதான plastic straws இதற்குள் சேர்க்கப்படுவதில்லை. பெரும்பாலும் குப்பைகளுடன் கலக்கப்படுகின்றன. கடலில் சேரும் பெரும்பாலான plastic strawகள் மனிதரால் எறியப்படுகின்றன. அதாவது குப்பையில் போடாமல் நிலங்களில் எறிவதால் அவை நீர்நிலைகளை அடைகின்றன.

பலர் plastic strawக்களை தடை செய்வதில் ஆர்வம் காட்டினாலும் சிலர் இச்சட்டங்களால் வரும் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டியுள்ளனர். பலவகையான இயலாமை உள்ளவர்கள், பலமற்றவர்கள், நோய் உள்ளவர்களால் straw இல்லாமல் நீர் குடிக்க முடியாது. அத்தோடு உலோகம், கண்ணாடி, கடுதாசி, மூங்கில் போன்றவற்றால் செய்யப்பட்ட strawக்கள் உடையும், சூட்டைத் தாங்காது, சூடு ஏறும், மடியாது போன்ற பல பிரச்சினைகளைக் கொண்டுள்ளன. சமுதாயத்தில் ஏற்கனவே கஷ்டப்படுபவர்கள் இத்தடையால் ஏன் இன்னும் கஷ்டப்பட வேண்டும் எனச் சிலர் கேட்கின்றனர்.

கடலில் சேர்ந்துள்ள குப்பையில் 0.03% தான் plastic strawகள் எனக் கூறப்படுகிறது. மீன்களைப் பிடிக்கும் பெரிய நிறுவனங்களினால் எறியப்படும் வலைகளும், பொருட்களும் இக்குப்பையின் அரைவாசியாக (50%) இருக்கிறது. அத்தோடு வளர்ச்சி அடைந்த நாடுகளே அதிகூடிய குப்பையை கடலில் போடுகின்றன.

இவ்வாறு போனால் 2050ஆம் ஆண்டில் கடலில் மீன்களைவிட plasticsதான் (நிறையில் பார்த்தால்) அதிகமாக இருக்கும் என ஓர் ஆய்வு கூறுகிறது. கடலில் சேரும் plastics மிகச்சிறிய துண்டுகள் (particles) ஆகின்றன. Plastic அழிவதற்கு பல நூற்றாண்டுகளிலிருந்து பல ஆயிரம் ஆண்டுகள்வரை எடுக்கும். Micro plastics என இச்சிறிய துண்டுகள் நீரில் இருப்பதால் மீன், ஆமை, குடிநீர், உப்பு போன்றவற்றில் plastic வர ஆரம்பித்துள்ளன.

2018இல் வெளிவந்த ஓர் ஆய்வில் மனிதக் கழிவுகளிலும் இப் plastic துண்டுகள் முதல் முறையாக காணப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடத்தக்க விடயம், அந்த ஆய்வில் பங்கு பற்றியோர் plastic போத்தலில் நீரும், plasticஆல் சுற்றப்பட்ட சாப்பாடுகளையும் அதிகம் உண்டுள்ளனர். அத்தோடு இவர்களில் ஒருவரும் சைவ உணவு உண்பவர் இல்லை. இதனால் 50% மனிதரின் உடம்பில் plastic இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இருந்தாலும் plasticஇனால் தான் வளர்ச்சி அடையாத நாடுகளில் சுத்தமான நீரும், உணவும் வீணாகாமல் பலருக்குக் கிடைக்கின்றன.



Garbage Island Pacific Ocean

எனவே, பொருட்களை எறியும் போது அவற்றை சரியான இடத்தில் பிரித்துப் போடுவது எமது கடமை. வளர்ச்சி அடைந்த நாடுகளில் வாழும் நாம் தேவைக்கு மிஞ்சிய பொருட்களையும், உணவையும் கடையில் வேண்டி அதிக அளவை வீணாக்குகிறோம். அதைக் குறைத்து நாம் பொருட்களை திரும்பப்பாவித்து, மீள் சுழற்சி செய்ய வேண்டும். நாம் பாவிக்கும் பொருட்களும் இதை மனதில் வைத்து நிறுவனங்களால் தயாரிக்கப்பட வேண்டும்.

கனேடியர் சராசரியாக தாம் வாங்கும் உணவுப் பொருட்களில் 25%ஐ குப்பையில் வீசுகின்றனர். வடஅமெரிக்காவில் மட்டும் வீணாகும் உணவுப்பொருட்களின் உற்பத்தியில் இருந்து குப்பையில் போகும் வரையிலுமான பசுமை வாயுக்களின் வெளியேற்றம் மட்டுமே 41 மில்லியன் கார்கள் ஒரு வருடம் முழுவதும் தெருக்களில் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தால் வெளியேறும் பசுமை வாயுக்களின் அளவிற்கு சமம் என சுற்றுப் புறச் சூழல் ஆய்வாளர் தெரிவிக்கின்றனர்.

Plastic என்றால் என்ன, உணவு என்றால் என்ன, ஏன் ஆடைகள், மின்சாரப் பாவனை, பொருட்கள் என்பனவற்றையும் அளவோடு வாங்கி, முறையாக முழுவதையும் பாவித்தால் அது எமக்கும் சூழலுக்கும் உலகிற்கும் நல்லது.

plastic straw - பிளாஸ்ரிக்கிலான உறிஞ்சும் குழாய்
Micro plastics - நுண்ணிய பிளாஸ்ரிக் துகள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SINDI FINANCIAL

**MONEY TRANSFER & FOREIGN EXCHANGE**

- துரித பணமாற்றுச் சேவையின் முன்னோடிகள்
- ஒரு தசாப்தகாலத்திற்கு மேலான சிறப்பு சேவை
- நம்பிக்கை உத்தரவாதம்

**792 Kennedy Road, Unit # 204**

**Tel: 416-288-0277**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினதருள் யாமினி மறவோம்!



R. மகேந்திரன்
கொ.இ.க. முன்னாள் அதிபர்

சென்றிடுவீர்... எட்டுத்திக்கும்! என்று பாட்டுக்கொரு புலவன் பாடியது நினைவிற்கு வருகின்றது. ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும் பிறந்த மண்ணை அவர்கள் மறக்கவில்லை. தமது சொந்தங்களையும் மறக்கவில்லை. இன்று தாயக பூமிக்குத் தம்மாலியின்ற உதவிகளை தவறாது செய்து வருகின்றனர். கொக்குவில் இந்துவின் மைந்தர்கள் இதற்கு நல்ல உதாரணமாக வாழ்கின்றனர்.

எமது கல்லூரிக்கு உதவவேண்டும் என்ற பெரும் இலட்சியத்துடன் பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது. சங்கத்தின் யாப்பிலே இது மிகவும் தெளிவாக வரையப்பட்டுள்ளது. வருடாந்த 'மகுடம்' நிகழ்ச்சி மூலம் பெறும் வருமானத்தினை கல்லூரியின் வளர்ச்சிக்கே செலவிட்டனர். நன்கொடைகள் பல பெற்று கல்லூரியின் கல்வி கற்கும் மாணவர்களுக்கே செலவிட்டனர்.

புலமைப் பரிசு நிதியம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிதியத்தின் மூலமே பல மாணவர்களுக்கு உதவி வருகின்றது எமது சங்கம். 'கற்றதொழுகு' என்பது எமது மகுட வாக்கியம். கற்பதற்கு உதவு என்பது கனடா பழைய மாணவர் சங்கத்தின் இலட்சியமாகும். இந்த அடிப்படையில் எமது கல்லூரியில் கற்கும் மாணவர்களுக்கு பல புலமைப் பரிசுகளை இச்சங்கம் வழங்கி வருவது பாராட்டுதலுக்கு உரியதாகும். வருடாவருடம் மகுடம் இந்தப் புலமைப்பரிசுகள் பெறுவோரின் பெயர்கள் வெளியிடுகின்றது. எனினும் சில உதாரணங்களைக் காட்ட விரும்புகின்றேன்.

2016ஆம் ஆண்டு: தரம் 6, 7, 8, 9, 10, 11 - ஒரு தரத்தில் பத்து மாணவர் வீதம் மொத்தமாக 60 மாணவர்களுக்கு தலா ரூபா 3,600 வழங்கப்பட்டது. 8 உயர்தர மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூபா 6,000 வீதம் வழங்கப்பட்டது. இப்படியான பல உதவிகளை எமது சங்கம் வழங்கிவருகின்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நம்பிக்கை நிதியம் மூலமாக வங்கிகளில் எமது சங்கச்சார்பாக பெருந்தொகை வைப்பில் இடப்பட்டுள்ளது. பல இலட்சத்திற்கு மேல் நிரந்தரவைப்பில் போடப்பட்டுள்ளது. (சரியான விபரம் எமது சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.) இந்த நிரந்தர வைப்பின் மூலம் பெறும் வட்டிதான் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. எனவே இந்த உதவியானது தொடர்ந்து செல்வது உறுதியானதாகும்.

கனடாவில் உள்ள பழைய மாணவர்களில் சிலர் தமது பெயரில் எமது சங்கம் ஊடாக இந்த நிதியத்திற்கு உதவி உள்ளனர். உதாரணமாக சுகிர்தம் ரீச்சர், சுந்தரலிங்கம் மாஸ்டர், நாகலிங்கம் அண்ணை, திருமதி இராசநாயகம் போன்றோர் ஞாபகார்த்தமாகப் புலமைப்பரிசு வழங்கப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். இவர்களது பெயரில் பரிசுகள் தொடர்ந்து வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். உதைபந்தாட்ட விருத்திக்கென்று தனியாக சுமார் ஒன்பது இலட்சம் ரூபா நிரந்தரவைப்பில் இடப்பட்டுள்ளது. இதனை எமது சங்கம் செய்துள்ளது. இதைத்தவிர 2018ஆம் ஆண்டு கனடா வாழ் பழைய மாணவன் நவநேசன், சாரணர் இயக்க வளர்ச்சிக்காக இருபத்தைந்து இலட்சம் ரூபா நிரந்தரவைப்பில் இட்டுள்ளார். எமது கல்லூரியின் சகலதுறை வளர்ச்சிக்கும் உதவ வேண்டியது இன்றைய தேவையாக இருக்கின்றது. எனவே எம்மாலியன்ற உதவிகளை நாம் செய்வது நல்லதெனக் கருதலாம்.

சில பழைய மாணவர்கள் பல்வேறு உதவிகளைத் தாமாகவே செய்து வருகின்றனர். கல்லூரி வளாக விரிவாக்கத்திற்கு (காணி வாங்க) உதவிய பல நல்ல உள்ளங்களை வாழ்த்துகின்றோம். கல்லூரி விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குப் பல பரிசுகளையும், உதவிகளையும் செய்துள்ள பழைய மாணவர்களுக்கு எமது நன்றி. காலத்தினால் செய்த உதவி உலகிலும் பெரியது என்பது பொய்யா மொழியாகும். எமது வாழ்வு வளம்பெற உதவிய கல்லூரித்தாயினைப் போற்றி உதவிட ஒவ்வொரு பழைய மாணவரும் தன்னாலியன்ற உதவியை செய்ய வேண்டும். எமது கனடா பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளிவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு சங்கத்தின் தலைவர் பொ. ரவிச்சந்திரன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்கள் எடுத்துள்ள முயற்சிகள் மிகவும் பாராட்டுக்குரியதாகும். சங்கத்தின் செயலாளர் புதிய தலைமுறை, பொருளாளரும் புதிய தலைமுறை, கலாச்சாரம், இளைஞர் விவகாரம் என்று பல புதிய தலைமுறை பழைய மாணவர்கள் செயற்குழுவில் மிகவும் திறமையாகவும் ஊக்கமாகவும் செயல்படுவது மிகுந்த நம்பிக்கையைத் தருகின்றது. இவர்களோடு மூத்த தலைமுறை பழைய மாணவர்களும் சேர்ந்து சிறப்பாகச் செயல்படுவது பாராட்டுதலுக்குரியதாகும்.

முயற்சி திருவினையாக்கும்.
ஒளிமயமான எதிர்காலம் கண்ணில் தெரிகின்றது!
தாயே... வணக்கம்....
வாழிய! வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகிழக்கு மாணவரின் இன்றைய நிலை?
## புலம்பெயர் தமிழரின் கடமை!



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

மாற்றம் ஒன்றே மாறாதது. தமிழ் மக்களுக்கு இது மேலதிகமாகப் பொருந்தலாம். வந்தாரை வரவேற்கும் கனடா, தமிழ் மக்களையும் அரவணைத்தது புதிதல்ல. பல இன்னல்களினூடாக வளர்ந்த பல சமூகங்களில் தமிழ் சமூகமும் ஒன்று.

1983களின் பிற்பகுதிகளில் கனடாவில் கருக்கொண்ட நமது இனம் நான்காவது சந்ததியை ஏற்றுக் கொள்ளும் காலம் அண்மையில் உள்ளது. முதலாவது சந்ததிக்கு இன்னல்கள் நிறைந்த வாழ்வு. புலத்திலும் நிலத்திலும் தமது கால்கள்! புலத்தில் தமது வாழ்வை பலப்படுத்தும் கால நேரத்தில் தினம் தினம் சிந்தனைகள். நிலத்தின் உரிமைக் கோலங்களின் சிந்தனைக் கோவைகள்.



எமது ஒரே கொள்கை கல்வி, இதை இரண்டாவது சந்ததிக்கு மிகவும் நேர்த்தியாக முதல் சந்ததி மாற்றியது. தமது வாழ்வின் நெருக்கடிகளுடன் புதிய சந்ததி புதிய பாதையில் பரிணமிக்கத் தொடங்கியது. முதலாவது சந்ததிக்கும் இரண்டாவதுக்கும் வித்தியாசம் என்னவெனில், முதலாவது சந்ததி படித்திருந்தும் தகுந்த வாழ்வை கட்டமைக்க முடியாத நிலைமை. பிந்தியது தனது பாதத்தை இறுக வைத்துக் கொண்டது. கற்றலிலும் செயலிலும் தனது வெற்றியைப் பறை சாற்றியது. சகல வாழ்வியல்களிலும் கால்தடம் பதித்து தமிழினத்திற்கென சூழலை உருவாக்கிக் கொண்டுள்ளது. நேர்மை, நம்பிக்கை, உதவும் மனப்பான்மை போன்றவற்றுக்கு முதலாவது சந்ததி உதாரணமாக வாழ்ந்து வருகின்றது. தமக்குள் குத்துப்பாடு வேறு கதை. இரண்டாவது ஒருபடி மேலே சென்றது.

ஒப்பீட்டளவில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பல சமூகங்களில் தமிழ் சமுதாயம் முன்னிற்பது பெருமைக்குரியதே. இதனை இரண்டாவதும், மூன்றாவதும் நடைமுறைப்படுத்தும். பொருளாதார ரீதியிலும், மக்கள் வாழ்வியலிலும் தன்னை நிரூபித்த சமுதாயம். தமது கலை, கலாசாரம், மொழியில் எங்கேயுள்ளது. இதுவே இன்று முக்கியமாகத் தொக்கி நிற்கும் வினா?

ஓர் இனம் வாழ, அதன் மொழி வாழ வேண்டும். இது எம் ஒவ்வொருவரினதும் கடமை. உலகப் பொதுத் தமிழ் மொழிக் கலாசாரத் தொகுப்புத் தேவை. இது வியாபாரமற்ற நோக்கமாகக் கருத்தப்படல் வேண்டும். மூன்றாம் நபர் வியாபாரத்துக்காக நடத்தப்படும் ஊடகங்களாக இருந்தாலும் சமூக ஊடகங்களாக இருந்தாலும் இவற்றிலிருந்து இதனை நாம் எதிர்பார்க்க முடியாது. 80 மில்லியனிற்கும் மேலானோர் பேசும் மொழி இன்னும் 100 ஆண்டுகளில் மறைந்து போகவேண்டுமா? இதுவே ஐ.நா.வின் அறிக்கையில் தெரிய வருகின்றது.

அரைகுறைத் தமிழ், ஆங்கிலம் கலந்த தமிழ் நிகழ்ச்சிகள், குடும்பத்தைக் குலைக்கும் தொடர்கள், பொழுதுபோக்கு என்று வஞ்சகத்தை வளர்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எனத் தொடரும் இவை எம்மை எங்கே கொண்டு செல்கிறது? நாங்கள்தான் முடிவு எடுக்க வேண்டும் அல்லது வேறு நபர்கள் எம்மீது தமது செயல்களை திணிப்பர்.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் இருந்துவரும் நிகழ்வுகள், இந்தியத் தொலைக்காட்சிகளால் மறைக்கப்படுகின்றன. இதற்குப் பல காரணங்களை முன்வைக்கலாம். எனினும் இதுபோன்ற ஊடகங்கள் தமிழைக் கேட்க வைக்கின்றன. அழிவு நிலையை காலதாமதப்படுத்துகிறன. இங்குதான் இனத்தின் பற்றுக்குரிய ஈடுபாடு தேவைப்படுகிறது. ஏற்கனவே கல்வியில் மிகவும் இக்கட்டான பின்தங்கிய நிலையில் இருக்கும் இலங்கைத் தமிழ் சமுதாயத்தை மீண்டும் கட்டி எழுப்ப புலம்பெயர் நாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் உதவ வேண்டும், முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

அண்மையில் இலங்கையில் நடைபெற்று வெளிவந்திருக்கும் GCE (O/L)இன் முடிவுகள் இலங்கையில் வாழும் தமிழ் மாணவரின் நிலையை வெளிக்கொணர்ந்துள்ளது. தரப்பட்டுள்ள பட்டியல் இலங்கையில் இருக்கும் 9 மாகாணங்களின் 25 மாவட்டங்களில் உள்ள GCE (O/L)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் பரீட்சை முடிவுகள்.

| GCE (O/L) Examination 2018 Performance of All Candidates by District | | | |
|---|---|---|---|
| District | No Sat | Qualified for GCE (A/L) Number | Qualified for GCE (A/L) Percentage |
| Colombo | 47,106 | 28,036 | 59.52 |
| Gampaha | 44,318 | 22,264 | 50.24 |
| Puttalam | 16,891 | 8,199 | 48.54 |
| Kandy | 35,986 | 17,393 | 48.33 |
| Kurunegala | 40,730 | 19,653 | 48.25 |
| Kalutara | 27,424 | 13,199 | 48.13 |
| Galle | 26,340 | 12,557 | 47.67 |
| Matara | 21,898 | 10,121 | 46.22 |
| Kegalle | 21,398 | 9,764 | 45.63 |
| Hambantota | 16,872 | 7,514 | 44.54 |
| Anuradhapura | 23,871 | 10,524 | 44.09 |
| Ratnapura | 27,337 | 11,971 | 43.79 |
| Polonnaruwa | 10,461 | 4,417 | 42.22 |
| Matale | 13,225 | 5,551 | 41.97 |
| Badulla | 23,934 | 9,930 | 41.49 |
| Nuwara Eliya | 18,846 | 7,667 | 40.68 |
| Monaragala | 13,045 | 5,040 | 38.64 |
| Vavuniya | 5,143 | 1,929 | 37.51 |
| Batticaloa | 17,126 | 6,419 | 37.48 |
| Mannar | 3,638 | 1,321 | 36.31 |
| Jaffna | 17,495 | 6,337 | 36.22 |
| Mullaitivu | 3,494 | 1,246 | 35.66 |
| Ampara | 22,910 | 8,163 | 35.63 |
| Trincomalee | 14,291 | 4,724 | 33.06 |
| Kilinochchi | 4,405 | 1,434 | 32.55 |
| **Total** | **518,184** | **235,373** | **45.42** |

இவற்றின் முடிவுகளில் இருந்து 25 மாவட்டங்களில் வீதாசாரத்தில் வடகிழக்கு மாகாணத்தில் இருக்கும் 8 மாவட்டங்களில் உள்ள மாணவர்களே பின்தங்கியுள்ளனர். உதாரணத்திற்கு யாழ். மாவட்டத்தில் 36.22%ஆன மாணவர்களே உயர்தரத்துக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். தவறு எங்குள்ளது என்பதனை நாம் நிச்சயம் சிந்தித்து திருத்தியே ஆக வேண்டும். என்ன செய்யலாம்?


இன்றைய நிலையில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் எட்டு மாவட்டங்களிலும் உள்ள தனித்தலைமைகள் ஒன்றாக ஒத்துழைக்க வேண்டும். இதனை விரைவில் உருவாக்க வேண்டும். இதற்கு மாணவர்களின் படிப்பாற்றலை இளமையில் இருந்தே வளர்த்தல் வேண்டும். கீழ் மட்டத்திலிருந்து ஆரம்பித்தலே மிகச் சிறந்ததாகும். ஒருவர் இருவர் என்றில்லாமல் மாவட்ட ரீதியாக இதனை வளர்ப்பதற்கு அங்கே நேர்மையான, தன்னலமற்ற தலைமைகள் முன் வரவேண்டும். இத்தலைமையை உடனடியாக உருவாக்குவதுடன் அதன் தொடர்ச்சி எதுவித அரசியல் நோக்கமற்று இருப்பதனை உறுதிசெய்யவேண்டும்.

இதற்குரியவர்களை தேடிப்பிடிப்பதும் அவர்களை கௌரவிப்பதும் இன்றைய தேவையாக நான் கருதுகின்றேன். அத்துடன் கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற புலம்பெயர் நாடுகளில் ஒப்பீட்டளவில் சிறப்பாக இருக்கும் முதலாவது, இரண்டாவது சந்ததிகளும் வளர்ந்து வரும் மூன்றாவது சந்ததியும் இதற்கு முன்வர வேண்டும்.

இன்று புலம்பெயர் நாடுகளில் வாழும் இரண்டாவது சந்ததி முன்னிற்க அதற்குரிய தூண்களாக முதலாவது சந்ததி இருக்கலாம்.

இதனை தவறவிடும் பட்சத்தில் தமிழ் என்ற இனம் ஒன்று இலங்கையில் இருந்தது என்றும், எமது முன்னோர் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் என்றும் எமது எதிர்கால சந்ததி கூற வேண்டி வரும். இதனைத் தவிர்ப்பதற்கு தகுந்த முடிவுகளை நாம் இன்றே எடுக்கவேண்டும்.

K.H.C. Well- Wishers' Association - Working Committee - 1957




From Left to right: Seated : A. Kanapathipillai (Hony. Treasurer), C. Palanithurai (Hony. Secretary), A. Ponthamparam, N. Chellappah, S.H.Perinbanayagam (President), C. K. Kanthaswami, C. Arulampalam, A. Amirthalingam.

Standing : First Row: V. Kanapathipillai, R. Arumugam, V. Sivasubramaniam, M. Sinnathamby, S.P. Villavathipillai.
Second Row: K. Ponnambalam, M.Kanthaswamy, K. Murugiah, P. Thamby.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்ராரியோ மாகாணப் பாடசாலைகளின் கல்வித் தராதரம்


சிவ.ஞானநாயகன்

வழமைபோல் 16ஆவது ஆண்டாக Fraser Institute என்னும் நிறுவனம் ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் கல்வித்தராதரத்தை தரநிலைப்படுத்தித் தனது அறிக்கையை 2019 ஜனவரி 20இல் வெளியிட்டது.

"கல்வித் தரம் மற்றும் பொறுப்பு அலுவலகம்" (The Education Quality and Accountability Office) என அழைக்கப்படும் EQAO என்னும் ஒன்ராரியோ மாகாண அரசின் நேரடியான கட்டுப்பாட்டுக்குள் வராத நிறுவனம், ஒன்ராரியோ மாகாணம் முழுவதும் உள்ள பாடசாலைகளில் 3ஆம், 6ஆம், 9ஆம் வகுப்புகளிலும் மற்றும் எழுத்தறிவிலும் நடத்திய மதிப்பீடுகளில் பெற்ற தகைமையைக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

EQAO நிறுவனம் 3ஆம் மற்றும் 6ஆம் வகுப்புகளில் வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் மாகாணம் முழுவதும் படிக்கும் மாணவர்களிடையே மதிப்பீடு செய்கிறது. அதேபோல் 9ஆம் வகுப்பு மாணவர்களிடையே கணிதமும் பின்னர் ஒன்ராறியோ மேல்நிலைப் பள்ளி எழுத்தறிவையும் (OSSLT) மதிப்பீடு செய்கிறது.

இம்மதிப்பீடுகளில் மாகாண அரச உதவிபெறும் பொதுப் பாடசாலைகளும் கத்தோலிக்க பாடசாலைகளும் கட்டாயமாகப் பங்குபற்ற வேண்டும். ஆனால் தனியார் பாடசாலைகள் தாங்கள் விரும்பினால் பங்குபற்றலாம்.

ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள பொது, கத்தோலிக்க மற்றும் தனியார் பாடசாலைகளில் 3,046 ஆரம்பப் பாடசாலைகளும் (Elementary Schools) 747 மேல் நிலைப் பாடசாலைகளும் (Secondary Schools) 2017_2018ஆம் கல்வியாண்டில் EQAO மதிப்பீட்டில் பங்கு பற்றியிருந்தன.

Fraser Institute இந்த அறிக்கையை தயாரிக்க 2017-2018ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற EQAO மதிப்பீடு, ஆண் பெண் மாணவரிடையேயான இம்மதிப்பீட்டின் வித்தியாசம் மற்றும் ஒன்ராரியோ மாகாண அரசின் மாகாணத் தரநிலையை எட்டிய அல்லது எட்டாத பாடசாலைகள் என்பவற்றை ஆராய்ந்து ஒரு பாடசாலைக்கு மொத்த அதி கூடிய மதிப்பீடாக 10ஐ கொடுத்து EQAOஇல் பங்குபற்றிய எல்லாப் பாடசாலைகளினதும் தரத்தைக் கணித்துள்ளது.

இந்த அறிக்கையை Fraser Institute இதற்காகத் தயாரித்த இருவரில் ஒருவரான Peter Cowley ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், பெற்றோர் ஒரு பள்ளிக்கூடம் கல்வித் தராதரத்தில் எவ்வாறு முன்னேறுகிறது, அயலில் உள்ள பள்ளிக்கூடங்களுடன் ஒப்பீட்டளவில் எங்கு நிற்கிறது, அந்தக் கல்வி வட்டாரத்தில் கல்வித் தராதரத்தில் எந்நிலையில் உள்ளது என்பதனை இந்த அறிக்கை மூலம் அறியமுடியும் என்றார்.

இவ் அறிக்கையை விமர்சிப்பவர்கள், இவ் அறிக்கை முற்று முழுதாகப் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் மட்டுமே தங்கியுள்ளது. மாணவர்களின் ஏனைய செயற்பாடுகளில் தங்கவில்லை. இது மாணவர்களின் ஒட்டுமொத்த செயல்தி-றனையும் பிரதிபலிக்கும் அறிக்கை இல்லை என்கிறார்களே என ஊடகவியலாளர் கேட்டனர்.

அக்கேள்விக்குப் பதிலளித்த Peter Cowley நிச்சயமாக இது ஒரு முற்று முழுதான அறிக்கை அல்ல. ஒன்ராரியோ கல்வி அமைச்சு மாகாண ரீதியில் மதிப்பிடும் எல்லா விடயங்களையும் இந்த அறிக்கை தனது கவனத்திற்கு எடுத்துள்ளது. "உங்களுக்குத் தேவையான எல்லாத்



தரவுகளும் உங்களிடம் இல்லை என்றால் நீங்கள் ஒன்றையும் செய்யாமல் இருக்க வேண்டும்." என்று கூறுவதை தான் நிரா-கரிக்கிறேன் என்று கூறிய Peter Cowley சில பாடசாலைகள் மாணவர்கள் திறமை அடைய மிகவும் உழைக்கின்றன. அவர்களை நாங்கள் நிச்சயமாக அடையாளம் காட்ட வேண்டும் என்றார்.

3,046 ஆரம்ப பாடசாலைகளுக்கு இடையே கணிக்கப்பட்ட இந்த அறிக்கையில் 16 பாடசாலைகள் மொத்த அதிகூடிய மதிப்பெண் 10ஐயும் பெற்றுள்ளன. இவற்றுள் 12 பாடசாலைகள் தனியார் பாடசாலைகளாகும். ஏனையவற்றில் இரண்டு பொதுப் பாடசாலையும் இரண்டு கத்தோலிக்கப் பாடசாலையும் அடங்கும். இந்த அறிக்கையில் 17 பாடசாலைகள் மிகவும் குறைந்த மதிப்பெண் ஆன 0ஐப் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25ஆவது ஆண்டில்

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா
வளர்ச்சி, செயற்பாடு, முயற்சி
மேலும் சிறப்படைய எனது வாழ்த்து

வாழ்வின் வளத்திற்கு ஆதன முதலீடும் ஒருபாதை

தொடர்புகளுக்கு: 416.315.9397

**Raja Mahendran**, P.Eng.
Owner/ Broker

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

**HomeLife / GTA Realty Inc.** *Brokerage

HOMELIFE
HIGHER STANDARDS

**416.321.6969**

**5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2**

*Independently Owned & Operated




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலிடத்தில் உள்ள 16 பாடசாலைகளும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. Sathya Sai school Toronto | (தனியார்) | Toronto |
| 1. Northmount School | (தனியார்) | Toronto |
| 1. Havergal School | (தனியார்) | Toronto |
| 1. Avondale Alternative Elementary School | (பொது) | Toronto |
| 1. St. Sebastian Separate School | (கத்தோலிக்க) | Toronto |
| 1. Islamic Institute of Toronto | (தனியார்) | Toronto |
| 1. Islamic Foundation school Durham | (தனியார்) | Ajax |
| 1. Islamic School of Cambridge | (தனியார்) | Cambridge |
| 1. Laggan Public School | (பொது) | Dalkeith |
| 1. St. Justin Martyr catholic Elementary School | (கத்தோலிக்க) | Unionville |
| 1. St. Mildred's -Lightbourn School | (தனியார்) | Oakville |
| 1. Khalsa Community School | (தனியார்) | Brampton |
| 1. Khalsa School Malton | (தனியார்) | Mississauga |
| 1. Sofa & Marwa School | (தனியார்) | Mississauga |
| 1. Al Risala Academy | (தனியார்) | Mississauga |
| 1. IQRA Islamic School | (தனியார்) | Mississauga |
| 17. Islamic School of Hamilton | (தனியார்) | Hamilton |
| 17. Silver Stream Public School | (பொது) | Richmond Hill |



747 மேல்நிலைப் பாடசாலைகளுக்கு இடையே கணிக்கப்பட்ட இந்த அறிக்கையில் ஒரு கத்தோலிக்க பாடசாலை மட்டுமே மொத்த மதிப்பெண் ஆக 9.4ஐப் பெற்றுள்ளது. இரண்டாம் இடத்தை ஒரு கத்தோலிக்க மற்றும் ஒரு பொதுப் பாடசாலையுமாக இரண்டு பாடசாலைகள் மொத்த மதிப்பெண் ஆக 9.2ஐப் பெற்றதன் மூலம் அடைந்துள்ளன. 11 பாடசாலைகள் மிகவும் குறைந்த மதிப்பெண் ஆன 0ஐப் பெற்றுள்ளன.

VIVEKA
Printers
647 406 3296



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம் வருமுன்

வைத்திய கலாநிதி - நாகேஸ்வரி முரளிதரன்.



அப்பெண்மணி மத்திய வயதை எட்டுகின்றார். நீண்டநாள் நீரிழிவு நோயாளி. இரண்டு சிறு பிள்ளைகள். ஒருவர் பாலர் வகுப்பு, மற்றவர் மூன்றாம் வகுப்பு. எழுதத் தொடங்கும்போதே சந்தேகம் ஒன்று வருகிறது. மருத்துவரிடம் தன்னைக் காண்பிக்கச் செல்பவர் நோயாளியா அல்லது வாடிக்கையாளரா? நோயோடு வந்தால் நோயாளி எனலாம். கிரமமாக தன்னைச் சோதித்துக்கொள்ள வரும் சுகதேகியை என்னவென்று அழைப்பது. இருதரப்பினரும் பரிசோதித்து முடிந்தால் நோயாளிப் பதிவேட்டில் (Patient Record) வந்துவிடுவர். மாறாக சுகதேகிக்கென ஒரு பதிவேடு இல்லை. மருத்துவர் என்றால் அவருடன் சேரும் உறவுச்சொல் நோயாளி. இந்த உறவுநிலை மயக்கம்தானோ என்னவோ பெரும்பாலான சுகதேகிகள் அல்லது சுகதேகிகள் என்று தம்மை நினைத்துக் கொள்வோர் மனதில் மருத்துவரிடம் தம்மை பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதில்லை. வருடக் கணக்காக மருத்துவரை அணுகாதவர்களும் உண்டு. இதனை ஒரு முன்மாதிரியெனக் கொள்ளலாமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தொடர்ந்து வாசிக்கும்போது விடை காணக்கூடியதாக உள்ளதா எனப் பார்ப்போம்.

திடகாத்திரமாகக் கணவர் இருக்கிறார். சகோதரங்கள் அருகிலேயே உள்ளனர். அம்மாவும் அப்பாவும் இன்னும் கூடவே உள்ளார்கள். எனக்கென்ன கவலை. விரும்பிய நேரம் விரும்பிய உணவு விரும்பிய பானம். இரத்தத்தில் சீனி ஏறினால் என்ன இறங்கினால் என்ன என்ற அலட்சியமான வீராப்பு வாழ்க்கை. கணவரும் ஒரே வேலை வேலை என்று busy. மாதங்கள் ஓடின சில வருடங்களும் ஓடின. நான் ஆரம்பித்ததுபோல் கதாநாயகன் கதாநாயகி இருவரும் மத்திம வயதில். பிள்ளை ஒன்று பாலர் வகுப்பில் மற்றையது மூன்றாம் வகுப்பில். திடீரென்று கணவருக்கு வயிற்றுக்குத்து ஆரம்பித்துவிட்டது. இதற்கெல்லாம் மருத்துவரிடம் போகமுடியுமா. வேலை வேலை வேலை. வயிற்றுக்குத்தும் அவரை விட்டபாடில்லை. மருத்துவரிடம் வருகிறார். பொதுவாக வயிற்றுக்குத்து என்று வந்தால் அது உயிர் பறிக்கும் விடயமல்ல என்பது எம் எல்லோரதும் பொது அபிப்பிராயம். அதன்படி மேலோட்டமான பரிசோதனை நடைபெறுகிறது. இந்த வயிற்றுக்குத்து வழமையான காரணங்களிற்குள் அடங்கவில்லை. மேலதிக பரிசோதனை செய்யப்படுகிறது. அடுத்த கட்டத்தில் திசுப்பரிசோதனை (Biopsy) செய்ய வரும்படி கேட்கப்பட்டது. இப்போதுதான் முதன் முறையாகத் தம்மை, தமது சுகவாழ்வை, குடும்பத்தை நினைத்து அவர்களுக்கு வியர்க்கத் தொடங்குகிறது. ஏன் அவர்களிற்கு வியர்க்கிறது என்று நீங்களும் ஊகித்திருப்பீர்கள். நானும் இதை ஒரு மருத்துவராக எழுதவில்லை. எழுத ஆரம்பித்த விடயங்களை வைத்து இது ஒரு மருத்துவக் கட்டுரை என்று ஊகித்திருந்தால் அது தவறு. அடுத்து அந்தத் தம்பதிகளின் ஆதங்கம்தான் இவ்வெழுத்தின் கருப்பொருள்.

பரிசோதனை முடிவுகள் வருமுன்பே காப்புறுதி ஒன்றை எடுத்துவிட முடியுமா என்று கிளித்தட்டு ஆட ஆரம்பிக்கின்றனர். ஆனால் காலம் கடந்து விட்டது. பரிந்துரைத்தல்கள், முதற்கட்ட பரிசோதனை, அதன் முடிவுகள், மேலதிக பரிசோதனைகள் எல்லாம் நோயாளியின் பதிவேட்டில் வந்துவிட்டது. மருத்துவம் சட்டதிட்ட வரைபிற்கு உட்பட்ட தொழில் என்பதால் நோயாளியின் பரிதாபம் பார்த்து எந்த மருத்துவரும் கூட்டல் கழித்தல் செய்யமாட்டார்கள். நோயாளியைப் பொறுத்தவரை ஆப்பு இழுக்கப்பட்டுவிட்டது. வால் மாட்டிக்கொண்டது. காப்புறுதி நிறுவனத்தினரைப் பொறுத்தவரை நூலின் ஒரு அந்தம் பிடிபட்டுவிட்டால் மிகுதியைத் தானே இழுத்து எடுப்பர். மருத்துவரின் மருத்துவக் குறிப்பில் மட்டும் தங்கியிருக்க மாட்டார்கள். இந்த நிலைகளின் யதார்த்தம் புரிந்த பின்புதான் அவர்களுக்கு தமது நிலையின் யதார்த்தம் உறைத்தது. இதுவரை இந்த உடம்பு கெட்டால் மறுஉடம்பு என்று கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையை நம்பி இருந்தார்களோ தெரியவில்லை. நோயாளியின் ஒப்புதலுடன்தான் காப்புறுதித் திட்டத்திற்கு அமைவாக காப்புறுதி நிறுவனம் மருத்துவரிடம் மருத்துவக் குறிப்புகளைப் பெற்றுக் கொள்ளும். மேலும் காப்புறுதித் திட்டத்திற்கு அமைய தானும் சில மருத்துவப் பரிசோதனைகளைச் செய்யும். புகைத்தல், மதுபானம், நோய்களின் தன்மை, வயது என்பவற்றுக்கு அமைய கட்டுப்பணம் குறையும் அல்லது கூடும். காப்புறுதிபற்றி நீங்கள் சிந்தித்திராத காலத்தில் மருத்துவரின் மருத்துவக் குறிப்பில் இவை இருந்தால் காப்புறுதி நிறுவனம் இவற்றைக் கவனத்தில் எடுக்கும்.

பொருள் ஒன்றைப் புதிதாக வாங்கினால் அதனுடன் ஒரு கையேடு வரும். என்னென்ன பாகங்களுக்கு எத்தனை எத்தனை வருட உத்தரவாதம், எப்படி எப்படி அவற்றைப் பராமரிக்க வேண்டும் என்ற விபரங்கள் அதில் இருக்கும். அதுவே ஒரு மோட்டார் வண்டியாக இருந்தால் காப்புறுதி மேலதிகமாக எடுத்திருக்க வேண்டும். நாம் எவரையாவது முட்டிவிட்டாலும் அல்லது பிறர் எம்மை முட்டிவிட்டாலும் உரியவர்களுக்கு நட்டஈடு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் அங்கு கட்டாயக் காப்புறுதி உண்டு. மனிதராகிய எம்விடயத்தில் கையேடும் இல்லை, பராமரிப்பு அட்டவணையும் இல்லை, உத்தரவாதமும் இல்லை, காப்புறுதிக் கட்டுப்பாடும் இல்லை. அவரவர்க்கு எது சரியென்று படுகிறதோ அதுவே வாழ்க்கை முறை. இத்தனைக்கும் நூறு வருடங்கள் வாழ்ந்துவிடுவோம் என்ற கனவு மட்டும் நாம் கண்டுகொள்கிறோம். இந்தக் கனவை வைத்தே எத்தனை போட்டிகள், எத்தனை பொறாமைகள்.

எமக்காக நாம் நேரமெடுத்து எமது வாழ்க்கை எந்த ஒழுங்கில் போகிறது என்று சிந்திக்க அமர்ந்ததுண்டா? அமர்ந்திருக்கிறோம் தொலைக்காட்சி முன்னால், தொலைபேசி நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்த, மேலும் எமது தேவைகளை தமது சேவைகளாக வழங்கும் நிறுவனங்களின் முன் என்று கதிரை உள்ள இடமெல்லாம் அமர்ந்திருக்கிறோம். சில இடங்களில் விருப்பத்துடன், சில இடங்களில் விருப்பின்றி. நாம் பிறக்கும்போது இயற்கை 24 மணி நேரத்தை எமக்கு தந்து அனுப்புகிறது. ஒரு நாளில் 24 மணிநேரம் உண்டு என்று நாம் அறிந்துகொள்ள முன்பே எமது சூழல் நாம் தூங்கும் நேரத்தைவிட மிகுதி நேரத்தை தன்கையகப்படுத்திக் கொள்கிறது. அது விரும்பும் வகையில் எம்மை செலவிட வைக்கிறது. எமக்காக நேரத்தை எடுத்துக் கொள்வதென்றால் வலுக்கட்டாயமாக அதன் பிடியிலிருந்து வெளிவரவேண்டி உள்ளது. இது பார்த்தால் ஒரு கைதி பிணையில் வெளிவருவது போன்றுள்ளது. வளர்ந்து வேலை செய்யத் தொடங்கிவிட்டால் சூழல் ஊதியத்தைத் தருகிறது. மாதம் முடியுமுன் தந்த பணத்தை மீண்டும் தன்னிடம் எடுத்து விடுகிறது. மேலைத்தேய விடுப்பெடுத்தல் (Vacation) கலாச்சாரம் என்பது பரபரப்பிலிருந்து தற்காலிகமாக நீங்கி எம்மை தணிவாக வைத்து புத்துணர்ச்சி பெற்றுக் கொள்வதற்காக வகுக்கப்பட்ட ஒரு முறை. அநேக சந்தர்ப்பங்களில் நாம் எமது விடுப்பைத் திட்டமிடும்போது நேரக்கழிவின்றி, பணச்செலவை நெருக்கி எமது விடுப்பையே இன்னுமொரு இயந்திர ஓட்டத்தில் திட்டமிடுகிறோம். சிலர்மட்டும் இதற்கு சற்று விதிவிலக்காகத் தம்மை திட்டமிட்டுக் கொண்டுள்ளனர். அந்த விடுப்பு எமக்குள் எந்தெந்த எச்சரிக்கை மணிகளை ஒலித்து எம்மை மறுதயார்ப்படுத்தி இருக்கவேண்டுமோ அவை எதுவும் நடைபெறாமலே விடுப்பு முடிந்து மீண்டும் அதே பரபரப்பு வாழ்க்கைக்கு திரும்பிவிடுகிறோம்.

எமக்காக நன்மை தீமைகளை சிந்திப்பதற்கு நாம் நேரம் எடுத்துக் கொள்வதை வாழ்வின் ஓரங்கம் என்று சொல்லலாமா? (ஆம்), (இல்லை) நீங்களே புள்ளடி இடுங்கள். எமது சமூகத்திலும் அவ்வப்போது சிறு விருந்து, ஒன்றுகூடல்கள் நடைபெறும். குடும்பங்களாகவோ, நண்பர்களாகவோ ஏதாவது ஒருவர் வீட்டில் ஒன்றுகூடுவார்கள். இவ் ஒன்றுகூடல்களில் ஒன்றிலாவது தத்தமக்குள் உள்ள குறைகளைக் களையவும், நல்லவற்றை உள்வாங்கிக் கொள்வதற்குமான ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் செய்கின்றனரா என்றால் இல்லை. ஏனென்றால் அவர்கள் சார்பில்தானே எமது போட்டிகளும், பொறாமைகளும் பின்னப்பட்டுள்ளது. இந்தக் குணாதிசயத்தால்தானோ என்னவோ மிகச் சாத்தியமான விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களை தவிர்த்து விடுகிறோம். நீண்ட நோக்கில் தவறவும் விட்டு விடுகிறோம்.

எமது வாழ்க்கை முறை, உண்ணும் உணவு, பயன்படுத்தும் பொருட்கள், வாழும் சூழல் எல்லாவற்றிலுமே இயற்கையான தன்மை பின்தள்ளப்பட்டு செயற்கைத் தன்மை முன்னிலைப்பட்டு நிற்கிறது. அப்பிள் பழத்தை வாங்கினால் தோலுடன் உண்ணலாமா, தக்காளிப்பழத்தை தோலுடன் சமைக்கலாமா என்று யோசிக்கும் அளவிற்கு அவற்றைச் சுற்றி மெழுகு படையாக உள்ளது. மீன் இறைச்சிகூட இதே நிலைதான். ஆனால் வேறு இரசாயனம். பாலைக் குடிப்பதற்கும் யோசித்தால் குடிக்க முடியாது. எமக்கும் யோசிக்க நேரம் தரப்படவில்லை. மாற்றுத் திட்டமும் எம்மிடம் இல்லை. எமது உடலிற்கு வேண்டாததையும், உடம்பு ஏற்காததையும் நாம் உட்புகுத்தி விடுகிறோம். இவ்வாறு உட்புகுத்தப்பட்ட செயற்கைகள் எமக்கு தீமை செய்கின்றனவா என்று ஆய்ந்து அறிந்து பதில் சொல்லுமுன் வருடங்கள் பல ஓடிவிடும். செயற்கை ஆடைகள் சந்தைக்கு வந்து 50 வருடங்களிற்கு மேலாகிறது. அவை தற்போது 80% மேல் ஆடைஉலகை ஆட்சி செய்கின்றன. மிகச் சமீபத்தில்தான் எமது விஞ்ஞானிகள் மெல்ல வாய்திறக்கிறனர். அதாவது தோய்க்கும்போது ஆடை நெய்யப்பட்ட பிளாஸ்ரிக்கின் கட்புலப்படா நுண்இழைகளின் தேய்மானம் நீருடன் வெளியேறி எமது குடிநீரிலும், கடல்நீரிலும் கலக்கிறதாம். இந்தக் குடிநீரும், அந்தக் கடலுணவும் பாதுகாப்பானதா என்று அவர்கள் தீர்மானம் செய்துகொள்ள முடியாது திண்டாடுகிறனர். இன்னுமொரு ஆய்வு அதை நீங்களும் அறிந்திருக்கக்கூடும். பசுமைக்களைக்கொல்லியான Round Up களைநாசினி பற்றியது. இக்களை நாசினியை எந்தப் பற்றைக்குமேல் விசிறிவிடுகின்றோமோ அவை கருகிவிடும். ஏறக்குறைய நெருப்பைவிட ஒருபடி மேல்போய் வேர்வரை கருகிவிடும். இக்களை கொல்லிப் பாவனைபற்றி நான் 30 வருடங்களுக்கு முன்பே இலங்கையில் அறிந்திருக்கிறேன். வயல்களில் பெரும்போக்காக அடித்துவிட்டு சில நாட்கள் கழித்து உழுவர். கடந்த வருடம்தான் சர்ச்சை வெளிப்படையாக கிளம்பி உள்ளது. ஆய்வாளர்கள் சொல்கிறார்கள் Round Up புற்றுநோயை தூண்டுகிறது என்று. தயாரிப்பவர் மறுப்பு அறிக்கை விடுகின்றார். கடந்த வருடம்வரை நாம் வாங்கக்கூடிய நிலையில்தான் இருந்தது. இதனைத் தடைசெய்திருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இலைதுளிர் காலத்தில் இதனை வாங்க முடியாது. ஆய்வுகள் எப்போ முடியும். ஆய்வாளர்களும் தயாரிப்பாளர்களும் எப்போ ஒரு முடிவிற்கு வருவார்கள். இரு பலமானவர்களுக்கிடையில் நடைபெறும் பலப்பரீட்சை. நடுவில் நாம். ஐம்பூதங்களில் நெருப்பு ஒன்றைத் தவிர மற்ற நால்வரையும் நாம் ஒருவழி பண்ணிவிட்டோம். அதனால்தான் என்னவோ செவ்வாயில் இடம் தேடுகின்றனர் போலும். என்ன நோய்வரும், யாருக்கு வரும், எப்போது வரும் என்பதை யார் சொல்வது? மருத்துவரா, விஞ்ஞானியா, யோசியரா?

நாமெல்லாம் பிறக்கும்போதும், வளரும்போதும், ஏன் வாழும்போதும் அந்த இடிசபாபா போயிங் 737ல் ஏறியவர்கள் ஏறும்போதிருந்த நம்பிக்கையுடன் எமது வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பிக்கிறோம். சிலரது முடிவுகள் இந்த விமானத்தின் முடிவாக அமைந்து விடுகிறது. எமது மகிழ்ச்சியும் நிம்மதியும் நீடித்திருப்பதற்கு எமது குடும்ப சுகவாழ்வு ஓரளவு திட்டமிடப்பட்டதாக இருப்பது நல்லது. சுகவாழ்வு எனும்போது அது வெறும் தேகத்துடன் நின்றுவிடுவதில்லை. எமது பொருளாதாரமும் சம்பந்தப்பட்டு நிற்கிறது. பிறக்கும்போது வரம் வாங்கி வந்தாலன்றி எல்லோர்க்கும் இத்திட்டமிடல் அவசியம். நான் முன்னர் குறிப்பிட்டது போல நோய் வந்தபின் மருத்துவரிடம் செல்லும்நிலை மாறவேண்டும். மனிதனின் அகச் சூழலின் ஸ்திரத்தையும், மாற்றத்தையும் அவரவர் இரத்தமும், சிறுநீரும் பெருமளவிற்கு காண்பித்துவிடும். வயதென்ன, செய்யும் தொழில் என்ன என்று பாராமல் குறைந்தது வருடம் ஒருமுறையேனும் உங்கள் மருத்துவரை அணுகி முழுமையான உடல் பரிசோதனை (Full body checkup) செய்தல் வேண்டும். இது மட்டும் அல்லாது "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதற்கமைய இளமையாக இருக்கும்போதே, உடல்நலம் நன்றாக உள்ளபோதே உங்கள் வாழ்விற்கும் வசதிக்கும் ஏற்ப நன்கு திட்டமிடப்பட்ட தொலைநோக்கான அடிப்படைக் காப்புறுதி ஒன்றை செய்து கொள்ளல் நன்று. இளமையும், சுகமும் நன்றாக உள்ளபோது மிகக்குறைந்த கட்டுப்பணத்தில் ஒப்பீட்டளவில் அதிகமான நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். குறிப்பாக இளம் குடும்பங்கள் இந்த வாய்ப்பைத் தவறவிடக்கூடாது. அவர்களின் பெற்றோர்கள் இதனை ஊக்குவிக்க வேண்டும். இறப்பு என்ற வெள்ளம் வந்து குடும்பத்தின் முதல் அணையான உங்களை அடித்துச் சென்றாலும் நீங்கள் செய்த காப்புறுதி என்ற இரண்டாவது அணை உங்கள் குடும்பத்தைக் காத்து நிற்கும். இன்றே சிந்திப்போம் நன்றே செயற்படுவோம்.

நேற்றுத்தான் பிறந்ததுபோல் உள்ளது<br>
அதற்கிடையில் இருபத்தைந்தா!<br>
வாழ்த்துக்கள்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**
**2019ம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்**

வருடாந்த பொதுக்கூட்டம் May 25th, 2019 (Saturday) 3:00 PM
இடம் / Place: GTA Square (Second Floor
5215 Finch Ave. E., & Middlefield Rd. (GTA Square)


**வெளிக்கள விருந்தும் விளையாட்டுப் போட்டிகளும்**
இடம்: Kid's Town L' amoreaux Park
3159 Birchmount Road
Birchmount & McNicoll Ave., Scarborough
காலம்: 29-06-2019 சனிக்கிழமை காலை 9 மணி முதல்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 416 318 6195, 416 388 3935
905 294 9670, 416 836 6937, 647 984 6467



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STARTING FROM HIGH $300'S
## Occupancy Date 2022




## MARGO CONDOS IN MARKHAM

### Margo Condos highlights:

- ✔ Located near the Historic Main Street Markham
- ✔ Across from the Mount Joy GO Station
- ✔ 8 minute drive to CF Markville Mall
- ✔ In close proximity to Highway 407
- ✔ 5 minute drive to the Markham Stouffville Hospital
- ✔ Close to shops, restaurants and schools
- ✔ Many nearby public transportation options
- ✔ Nearby parks include Raybeck Park, Springdale Park and Mintleaf Park







# Our Incentive Would Be $3000.00 Towards The Closing Fee



RED DIAMOND 2017 & 2018

THE AWARD OF EXCELLENCE

TOP 2% IN CANADA

**XAVIER/MURALI**

ANTON SEBASTIAMPILLAI SIVAKUMAR

REAL ESTATE PROFESSIONALS

ROYAL LEPAGE Signature Realty

Dir: 416.301.1183
Bus: 905.568.2121
xavier4home@gmail.com

Dir: 416.624.7253
Bus: 905.568.2121
listwithmurali@hotmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்மாவட்டத்தில் துடுப்பாட்ட விளையாட்டில் (CRICKET) வரலாற்றுச் சாதனை படைத்த அமரர் வீரசிங்கம் பவசிங்.



யாழ்மாவட்டத்தின் துடுப்பாட்ட விளையாட்டு வரலாற்றில் வரலாற்றுச் சாதனை படைத்த அமரர் வீரசிங்கம் பவசிங் கொக்குவில் பிரம்படியில் வாழ்ந்து வந்த வீரசிங்கம், நாகேஸ்வரி தம்பதியினருக்கு மூத்த மகனாக 1950ம் ஆண்டு ஆனி மாதம் 3ம் திகதி பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து, பின்னர் சொற்பகாலம் சுண்ணாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூாயில் கல்வியைத் தொடர்ந்து மீண்டும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்ந்து கொண்டார்.

இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் துடுப்பாட்டம் (CRICKET) மற்றும் உதைபந்தாட்டம் (SOCCER) ஆகிய விளையாட்டுக் குழுக்களில் பங்குபற்றி இருந்தாலும் கல்லூரியின் துடுப்பாட்டப் பயிற்றுனர் அமரர் கலையரசு சொர்ணலிங்கம் பாலகிருஸ்ணன் அவர்களின் பயிற்றுவிப்பினால் யாழ்மாவட்டத்தில் 1967ம் ஆண்டு முதல் 1970ம் ஆண்டுவரை சிறந்த பந்துவீச்சாளராகத் திகழ்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு பெருமையைத் தேடிக் கொடுத்ததுடன் தனக்கும் பெருமையைத் தேடிக் கொண்டார்.

1967ம் ஆண்டு நடைபெற்ற யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான இரண்டாம் பிரிவிற்கான (Second eleven) சுற்றுப்போட்டிகளின் அரையிறுதிப் போட்டியில் அமரர் வீரசிங்கம் பவசிங் தனது பந்துவீச்சின் அபாரத் திறமையை வெளிப்படுத்தினார். இந்த அரையிறுதிப் போட்டி யாழ் இந்துக் கல்லூரிக்கு எதிராக யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் குழுவிற்கு அமரர் முருகுப்பிள்ளை தெய்வேந்திரம் தலைமை தாங்கினார். இந்தப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி முதலாவது துடுப்பாட்டத்தில் (First Innings) கொக்குவில் இந்துக் கல்லூரியைவிட 30 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது. இதன் காரணமாக யாழ் இந்துக் கல்லூரி வீரர்களும் அவர்களது ஆதரவாளர்களும் மிகவும் உற்சாகமாகவும், குதூ கலத்துடனும் இருந்தனர். யாழ் இந்துக் கல்லூரி இரண்டாவது ஆட்டத்தைத் தொடங்கியபோது தான் திருப்புமுனை ஏற்பட்டது. இத் திருப்புமுனைக்கு மூலகாரணமாக அமரர் வீரசிங்கம் பவசிங் திகழ்ந்தார். இரண்டாவது நாள் மதிய இடைவேளையின்போது யாழ் இந்துக் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் 4 இலக்குகளை இழந்திருந்தது. இந்த 4 இலக்குகளையும் அமரர் வீரசிங்கம் பவசிங்கே கைப்பற்றியிருந்தார். இடைவேளையின் பின்பு யாழ் இந்துக் கல்லூரி சகல இலக்குகளின் இழப்பிற்கும் 47 ஓட்டங்களை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்தது. யாழ் இந்துக் கல்லூரியின் இரண்டாவது ஆட்டத்தில் அமரர் வீரசிங்கம் பவசிங் 7 இலக்குகளை வீழ்த்தியிருந்தார். இதன் காரணமாக கொக்குவில் இந்துக் கல்லூரி முழு வெற்றியைப் பெறுவதற்கு 78 ஓட்டங்களை மாத்திரமே பெறவேண்டி இருந்தது. இந்த 78 ஓட்டங்களையும் 4 இலக்குகளை மட்டுமே இழந்து 6 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. இந்த வெற்றியை பெறுவதற்கு அமரர் வீரசிங்கம் பவசிங்தான் முதன்மையானவராகத் திகழ்ந்தார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மேற் கூறப்பட்ட அரையிறுதிப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியை வெற்றிவாகை சூடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 1967ம் ஆண்டு தனது மைதானத்தில் யாழ் மத்திய கல்லூரியை எதிர்த்து இறுதிப் போட்டியில் விளையாடியது. இரண்டாம் பிரிவிற்கான ஒரு இறுதிப் போட்டியை துடுப்பாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூ ரி சந்தித்தது இதுவே முதன்முறை ஆகும். இந்த இறுதிப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில், கொக்குவில் மக்கள் நிறைந்துகாண பலத்த கரகோசத்துடனும், பலத்த எதிர்பார்ப்புடனும் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் குழுவிற்கு அமரர் முருகுப்பிள்ளை தெய்வேந்திரம் தலைமை தாங்க யாழ் மத்திய கல்லூரியின் குழுவிற்கு தலைமை தாங்கியவர் அமரர் முருகுப்பிள்ளை தெய்வேந்திரம் அவர்களின் அயல் வீட்டவர் திரு. குகேந்திரன் ராஜதுரை ஆவார். இது ஒரு சுவாரசியமான சம்பவமாகும்.

யாழ் மத்திய கல்லூரி சிறந்த துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டிருந்தபோதும் எமது கல்லூரியின் மிகச்சிறந்த பந்துவீச்சாளரான அமரர் வீரசிங்கம் பவசிங் அவர்களின் அபார பந்துவீச்சிற்கு திணறிய யாழ் மத்திய கல்லூ ரித் துடுப்பாட்ட வீரர்கள் தங்களது முதலாவது ஆட்டத்தில் சகல இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர். இந்த ஆட்டத்தில் அமரர் வீரசிங்கம் பவசிங் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். இந்தப் போட்டியில் இன்னுமொரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். எமது கல்லூாயில் க.பொ.த சாதாரன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



tico.ca ACTA

**Travel with us with the lowest fare, We'll give you the best service and care...**

**OUR SERVICES**

- Worldwide Air Ticketing
- Cruises
- Bus Tours
- Car Rental
- Travel Insurance
- Visa Arrangements
- Vacation Packages (all inclusive)

Ideal Escape Vacation Ltd.

## Ideal Escape Vacation Ltd.

GTA Square Mall
5215 Finch Ave E, Unit #160
Scarborough, ON

Tel: **416-841-1833**
Fax: 647-847-7552
idealescape@gmail.com
**www.idealescape.ca**

# YAARL CAKE HOUSE INC.

Since 1985

*Since 1985*



R. Chandra

## YAARL CAKE HOUSE INC.

100% HALAL
حلال
HALAL
Pure Veg

Cake & Vegetarian Cake Specialist, Specialized in all kind of cake for all occasions Weddings, Birthdays & Anniversaries

Sun City Plaza
2761 Markham Road, Unit 24
Scarborough, ON M1X 0A4
email:brotherking@gmail.com
www.yaarlcakehouse.com

Tel: 416-431-6604/416-431-6874
Res: 905-472-2580
Cell: 416-846-7062/416-816-8641
email: chandra6604@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புவரை (G.C.E O/L) படித்த அமரர் டாக்கடர் இராஜசுந்தரம் க.பொ.த உயாதர (G.C.E A/L) கல்வியைக் கற்பதற்காக யாழ் மத்திய கல்லூரிக்கு சென்று அக்கல்லூரி சார்பாக இப்போட்டியில் தொடக்க ஆட்டக்காரராக எமது கல்லூரிக்கு எதிராக விளையாடினார்.

அடுத்து துடுப்பெடுத்து ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களை எடுத்து 65 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இரண்டாவது ஆட்டத்தைத் தொடங்கிய யாழ் மத்திய கல்லூரி சிறிது நிதானமாக ஆடியும் எமது வேகப்பந்து வீச்சாளர் அமரர் வீரசிங்கம் பவசிங் வீசிய பந்துகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இதனால் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றியை பெறுவதற்கு 78 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டது. ஆனால் இந்த ஓட்டங்களைப் பெறுவதற்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு 14 ஓவர்கள் மாத்திரமே கொடுக்கப்பட்டது. எமது கல்லூரி அணி முதல் மூன்று ஓவர்களில் 2 இலக்குகளை இழந்துவிட்டது. எனினும் எமது அணியின் தொடக்க ஆட்டக்காரரான திரு. ந. இராஜகுலசிங்கத்துடன் அணித்தலைவர் அமரர் மு. தெய்வேந்திரன் இணைந்து விளையாடி வெற்றி இலக்கான 78 ஓட்டங்களைப் பெற்று கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வெற்றிவாகை சூடித்தந்தனர். எமது அணியின் தொடக்க ஆட்டக்காரரான திரு. ந. இராஜகுலசிங்கம் ஆட்டம் இழக்காமல் அதிரடியாக விளையாடி 52 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கான காரணகர்த்தாக்களில் ஒருவரானார். இவ் வெற்றிக்கு மற்றொரு காரணகர்த்தாவாக விளங்கிய அமரர் வீரசிங்கம் பவசிங் எதிரணிக்கு சிம்மசொப்பனமாக விளங்கி மொத்தமாக 12 இலக்குகளை வீழ்த்தி கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வெற்றி மகுடத்தை சூட்டினார் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. அடுத்த ஆண்டாகிய 1968ல் நடைபெற்ற யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான இரண்டாம் பிரிவிற்கான (Second eleven) சுற்றுப்போட்டிகளின்போதும் திரு. P. விஜயராஜா தலைமையில் இறுதிப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜெனா கல்லூரியைத் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது மிகவும் சிறப்பம்சமாகும்.

